இலவசப் பிரதி
Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

LIONAIR 24 மணி நேர சேவை
கழிவுக் கட்டணங்களில்........
விமான பயணச்சீட்டுக்கள்!!
இன்ர நெற் அழைப்புக்கள் ரூபா 20/=
கொழும்பில்
THAMPI buildings
177, Old Moor Street,
Colombo-12.
Tel- 01-343125, 075-355322
HOTLINE: 0777-382343, 072-401423
யாழ்.நகரில்
90, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல–021–2222504
021–2222823
(சி-403)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்க:தா 05 (09.01.2003) வியாழக்கிழமை இதழ் : 100




அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் நோர்வேயின் மத்தியஸ்தத்தையும் கண்டித்து– ஜே.வி.பி. கொழும்பில் லிப்டன் சதுக்கத்தில் நேற்று நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கான பேர் கலந்து கொண்டனர்.

## கரும்புலி அணியைக் கலைக்குக; ஜனாதிபதி சந்திரிகா கேட்கிறார்!

(கொழும்பு நிருபர்)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகள் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்த, நல்லெண்ண அடிப்படையில்- புலிகள் தமது கரும புலிகள் படையணியைக் கலைக்க வேண்டும் என - ஜனாதிபதி கருதுவதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது,

மிலேனியம் சிற்றியில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி, இராணுவத்தின் விசேட ஊடுருவும் படையணியை அரசாங்கம் கலைத்து விட்டதாக அறியமுடிகிறது.

இதுபோலவே, புலிகளும் தம்மிடம் உள்ள கரும்புலிகள் படையணியைக் கலைத்து, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கருதுகிறார்.

ஐ.தே.க.வும் புலிகளும் இணைந்து செயற்படும்போது, ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து செயற்படுவதில் என்ன தவறு இருக்கிறது என்றும் ஹரீம் பீரிஸ் மேலும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் பத்தாயிரம் பேரைப் படையில் சேர்த்திருப்பதாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(01,200)

# வட-கிழக்கிலிருந்து ராணுவம் விலகினால்

# கரும்புலிகள் அணியை கலைக்கத் தயார்!

## சந்திரிகாவின் பேச்சுக்கு பாலா பதிலடி

(நகொன்பத்தமிலிருந்து கனகரவி)

**அரசாங்கம் வட-கிழக்கில் இருந்து இராணுவத்தை நல்லெண்ண அடிப்படையில் வெளியேற்றினால், நாமும் கரும்புலிகள் படையணியைக் கலைப்போம். இவ்வாறு- விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றைய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கொழும்பில் பேசும்போது- விடுதலைப் புலிகள் நல்லெண்ண அடிப்படையில் கரும் புலிகள் படையணியைக் கலைக்க வேண்டும் என ஜனாதிபதி விரும்புவதாக தெரிவித்தமைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது,

எமது இராணுவம் மக்களின் சொத்து. பதினேழாயிரத்துக்கும் அதிகமான போராளிகளின் உயிர்த்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் விலகியதால் பாதிப்பில்லை பாதுகாப்பு குழு 14 ஆம் திகதி கூடும்

### என்கிறார் அமைச்சர் பீரிஸ்



புனர்வாழ்வு சம்பந்தமான நிகழ்ச்சி நிரல்களை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தயாரித்திருப்பதாகப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

தாய்லாந்தில் நடைபெறுகின்ற 4 ஆவது சுற்றுப் பேச்சுக்களின் மூன்றாவது நாளான நேற்று, செய்தியாளரிடம் பேசியபோதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

முழுமையான புனர்வாழ்வுத் திட்டம் இப்பொழுது வரையப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் பங்குகொள்ள வேண்டாம் ஜப்பானுக்கு இந்தியா அறிவுறுத்தல்!

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதோடு, ஜப்பான் தனது பணியை நிறுத்திக்கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஜப்பான் நேரடியாக பங்குகொள்ள வேண்டாம் என்று இந்தியா ஜப்பானுக்கு அறிவுரை கூறியுள்ளது.

இந்தியாவில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யொரிக்கோ கவாகுச்சி, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்துப் பேசியபோதே இந்த அறிவுரை வழங்கப்பட்டது என்று, ஜப்பான் நாட்டு வெளியுறவு அமைச்சின் சார்பில் கருத்து வெளியிட்ட, கட்சு நிசாபாப்பு சீமா என்ற அதிகாரி தெரிவித்தார்.

ஜப்பானிய புதிய வெளியுறவுக் கொள்கையின்படி இலங்கையில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய படை வெளியேற்றம் திட்ட வரைபு இன்று வெளியாகும்?

(நகொன்பத்தமிலிருந்து கனகரவி)

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து படையினரை அகற்றுவது குறித்து வரையப்பட்ட புதிய திட்டவரைபு பற்றிய விபரம் இன்று மாலை வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு, புலிகள் மற்றும் நோர்வே மத்தியஸ்தர் குழுவினர் ஆகிய முத்தரப்பும் இணைந்து தயாரித்த மேற்படி திட்ட வரைபு குறித்து, இன்றைய பேச்சுக்களின் போது ஆராயப்பட்டவிருக்கிறது. பேச்சின் முடிவில் மேற்படி திட்ட வரைபு குறித்த விபரம் வெளியிட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### விண்ணாணம் விநாசியர்



உவயள் தாங்களும் நல்லது செய்யாயினம்.., செய்யிறவரையும் விடாயினம்...

## வெஸ்பேர்க்கை வெளியேற்ற மேல் மாகாணசபை தீர்மானம்

நோர்வேத்தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை நாடுகடத்துமாறு கோரி மேல் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேல் மாகாண சபையின் ஜே.வி.பி உறுப்பினரான சிறிபால அமரசிங்க- ஜோன் வெஸ்பேர்க்கை வெளியேற்றக் கோரும் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும், நாட்டுக்குத் துரோகம் செய்துள்ளதாகவும், புலிகளுக்கு வானொலி உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்ததாகவும்- இவர் மீது ஜே.வி.பி உறுப்பினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தார்.

இந்தப் பிரேரணை 41-33 என்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சிங்களக் குடியேற்றம் நேற்றைய பேச்சுக்களில் ஆராய்வு

திருகோணமலையில் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றம் குறித்தும் நேற்றைய பேச்சுக்களின் போது ஆராயப்பட்டது.

இவ்விடயம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

பின்னர் இரு தரப்பும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர். எனினும், இவ்விவகாரம் தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

# வட கொரியாவுடன் பேசப்போவதான அமெரிக்காவின் முடிவுக்கு வரவேற்பு


வடகொரியாவின் உண்மை நிலை எவருக்குமே தெரியாது

அணுவாயுத உற்பத்தி தொடர்பாக வடகொரியாவுடன் தனது நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்ற அமெரிக்காவினது புதிய தீர்மானத்தினை ஆசிய நாடுகள் வரவேற்றுள்ளன.

வடகொரியா தனது அணுவாயுத உற்பத்தியை மீள ஆரம்பிப்பது என எடுத்த தீர்மானத்தினால், அண்மையில் அமெரிக்காவிற்கும் வடகொரியாவுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது வொஷிங்ரன் இவ்விடயம் தொடர்பாக வடகொரியாவுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இதனை தென்கொரியாவும் ஜப்பானும் வரவேற்றுள்ளன.

இதேவேளை- அணுவாயுத உற்பத்தி தொடர்பான அமெரிக்காவினது கருத்துநிலை மாற்றத்தினைக் குறித்து கருத்து எதனையும் தெரிவிக்காத வடகொரியா- அதேவேளை, தனக்கும் தென்கொரியாவிற்கும் இடையில் அணுவாயுத யுத்தம் ஆரம்பிக்கப் போவதாக வதந்திகளை அமெரிக்கா விசமத்தனமாக பிரசாரப்படுத்தி வருவதாக கண்டனம் தெரிவித்துள்ளது.

# செனகலில் கடும் சமர் மூண்டது
## 4 இராணுவம், 30 போராளிகள் பலி


செனகல் போராளி

செனகலில் விடுதலைப் போராளிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரு தரப்பினருக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

செனகலின் தெற்கு மாநிலமான கசமான்ஸ்சில் நடைபெற்ற மோதலில்- முப்பது போராளிகளும் நான்கு இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாக செனகல் இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு, பிரெஞ்சு உல்லாசப் பயணிகள் அதிகமாகத் தங்கும் உல்லாச விடுதி ஒன்றிற்கு அருகில் பலத்த மோதல் நடைபெற்றதாக, அங்கு தங்கியிருந்த உல்லாசப் பயணி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த இருபத்தியொரு ஆண்டுகளாக தெற்கு செனகலை தனியானதொரு அரசாகப் பிரகடனப்படுத்தும் நோக்குடன் போராளிகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, செனகல் இராணுவத்தினருக்கு இம் மோதலில் சேதம் பாரியளவில் ஏற்பட்டுள்ளதாகவும், 24 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும், தமது படைமுகாம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத செனகல் இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.


இஸ்ரேல் படைகளால் மூடப்பட்ட கிழக்கு ஜெருசலேமின் வீதியொன்றினூடாக, அங்கவீனமடைந்த பலஸ்தீனச் சிறுமி ஒருத்தியை அவளது உறவினர்கள் மிகுந்த சிரமத்துடன் எடுத்துச் செல்கின்றனர்.பலஸ்தீனரின் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து இவ்வீதி மூடப்பட்டிருந்தது.

## செஞ்சிலுவைச் சங்க உதவியுடன்
# காணாமற்போனோர் குறித்து ஈராக் - குவைத் ஆராய்வு


மீண்டும் ஈராக் வரும் அமெரிக்கப்படைகள்

குவைத்தை 1990 ஆம் ஆண்டு ஈராக் ஆக்கிரமித்த பின்னர் ஏற்பட்ட யுத்தத்தின்போது காணாமற்போனோர் பற்றிய கலந்துரையாடலை இரு நாடுகளும் நடத்த ஆரம்பித்துள்ளன.

1990 ஆம் ஆண்டு குவைத்தினை ஈராக் ஆக்கிரமித்தபோது, 600க்கும் மேற்பட்ட குவைத் மக்கள் காணாமற்போயுள்ளதாக குவைத் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை-

தனது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரஜைகள் வளைகுடா யுத்தத்தின்போது காணாமற்போயுள்ளதாக ஈராக் தெரிவித்துள்ளது.

இந்தவகையில்- இரு நாட்டு அதிகாரிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் மத்தியஸ்தத்துடன் மேற்படி விடயத்தினைப் பற்றி தமக்கிடையே கலந்துரையாடத் தொடங்கியுள்ளனர். இது உற்சாகம் தரும் விடயம் என செஞ்சிலுவை சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நான்காண்டுகளுக்கு முன்னர் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க நாட்டின் பிரதிநிதி ஒருவர் கலந்து கொண்டதால் ஈராக் பேச்சுவார்த்தையில் இருந்து தானாகவே விலகிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, லைலா, சினேகா நடித்த
உன்னை நினைத்து
10.01.2003 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 மட்டும் SPIDER MAN
(சி/397)


# நியூசிலாந்து மண்ணில் இந்திய அணி முதல் வெற்றி


மீண்டும் களத்தில் கெய்ன்ஸ்


யுவராஜ் சிங்

வெலிங்டனில் நேற்று நடை பெற்ற இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இரண்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய நியூசிலாந்து அணி 42. 4 ஓவர்களிலேயே தனது சகல விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆட்டக்காரர்களை அடுத்தடுத்து இழந்தபோதும் வெற்றியைப் பெற்றது.

சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி ஆகியோர் ஓட்டம் எதையும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர். அணியின் இளம் ஆட்டக்காரர்களான யுவராஜ்சிங் 54 ஓட்டங்களையும் வீரேந்திர ஷேவாக் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

சஹீர் கான் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றார். அவர் முன்னதாக நியூசிலாந்து அணியின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.. 43. வது ஓவரில் இந்திய அணி வெற்றி இலக்கான 169 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்துச் சுற்றுலாவுக்குச் சென்றுள்ள இந்திய அணி பெற்றுள்ள முதலாவது வெற்றி இதுவாகும். ஏற்கனவே நடந்த டெஸ்ட் போட்டிகளிலும் நான்கு ஒரு நாள் போட்டிகளிலும் இந்திய அணி படுதோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள் இனிய நாள்

09-01-2003 - வியாழக்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- அந்நிய உதவி, பொருள்வரவு, குடும்பச் சிறப்பு. |
| இடபம் | :- வயிறு, மார்பில் வலி, ஏமாற்றம், புதிய அனுபவம். |
| மிதுனம் | :- சௌபாக்கியம், வாகன லாபம், களஸ்திர மகிழ்ச்சி |
| கர்க்கடகம் | :- பிரயாணத்தால் கஷ்டம், தேகசுகக் குறைவு, குடும்ப மனஸ்தாபம். |
| சிங்கம் | :- பொருள் இழப்பு, குடும்ப சுகம், அதிக அலைச்சல் |
| கன்னி | :- வாகன சுகம், இல்லச் சிறப்பு, சிநேகிதரால் நன்மை |
| துலாம் | :- மனச் சந்தோசம், வீண் மனஸ்தாபம், பிரிவு, வாகன நட்டம் |
| விருச்சிகம் | :- உறவினரால் லாபம், நினைத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி |
| தனு | :- ஆயுதத்தால் கெடுதல், தூக்க குறைவு, வீண்பழி கேட்டல் |
| மகரம் | :- பெண்களால் நன்மை, அதிக லாபம், காரிய சித்தி, உடல் ஆலோக்கியம் |
| கும்பம் | :- குடும்பத்தில் நோய், வீண் மனஸ்தாபம், அதிக செலவு. |
| மீனம் | :- பெரியோர் மதிப்பு, குடும்ப மகிழ்ச்சி, அமைதியான வாழ்வு |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்


சிறு விளம்பரம்

பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.
(சி-439)

விவசாயிகளே!
உங்களுக்கு தேவையான பங்கசு நாசினிகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுகள்.
உழவர் களஞ்சியம்
கமக்காரர் மாளிகை
பலாலி வீதி, திருநெல்வேலி.
K.K.S வீதி, சுன்னாகம்.
T.P: 021-2223785
கிருமிநாசினிகள் ஆபத்தானவை அவதானமாக பாவிக்கவும்.

ராஜா யாழ்ப்பாணம்.

முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
10.30, 2.30, 6.00
(சி-398)

ஏசியன் எலக்ரோனிக் சென்ரர்
மின்சார, இலத்திரனியல் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஒரே இடம்
AASIAN ELECTRONICS CENTRE
No.11/4, Stanly Rd. Jaffna.
T.P.0777-785549

# பிரபாகரனைப் பின்பற்றியே பிரதமர் ரணில் பேசுகின்றார்!

## ஜே.வி.பி. விமல் வீரவன்ச கூறுகிறார்.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பின்பற்றத் தொடங்கியிருப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கும் 'ஜனபல' என்ற மக்கள் இயக்கம் ஒன்றைத் தொடக்குவது குறித்த செய்தியாளர் மாநாட்டிலேயே, விமல் வீரவனச இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பின்பற்றி, ரணில் தனது மேடைப் பேச்சுக்களை நடத்தி வருகிறார். பிரபாகரனின் மாவீரர் நாள் உரையின் மேடையமைப்பு, பின்னணி என்பவற்றைப் பின்பற்றி

ரணிலின் 'சிரச' மூலமான உரையின் மேடையமைப்பு, பின்னணி என்பன ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது எனக் கண்டனம் தெரிவித்த விமல் வீரவன்ச,

யாழ்ப்பாணத்திலுள்ள படைத் தலைமை, உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து கடைப்பிடிக்கும் கொள்கை குறித்துப் பாராட்டுத் தெரிவித்ததுடன்,

இராணுவம் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு வலயங்களின் பாதுகாப்பை அரசாங்கம் இரகசிய உடன்படிக்கை மூலம் குறைத்து விடப் பார்ப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். ஐ.தே.க. அரசாங்கம் தூக்கி எறியப்படும்வரை ஜனபல இயக்கம் தொடரப்படுமென விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

# ஏ-9 வீதித் திருத்தம் பொங்கலன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புளியங்குளம் தொடக்கம் முகமாலை வரையுள்ள ஏ-9 வீதியைத் திருத்தும் பணி எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனால், இந்த நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் மிதிவெடிகள் உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணிகளில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

# சிங்கள மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு கருவிகள்

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுவரும் சிங்கள மீனவர்களுக்கு நவீன தொலைத்தொடர்புச் சாதனங்களை அரசாங்கம் வழங்கிவருகின்றது.

இயற்கை அழிவுகள், அனர்த்தங்கள் ஏற்படும்போது மீனவர்கள் உடனடியாக அறிவித்து, உதவி கோருவதற்கு இந்தத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் பெரும் உதவியாக அமையும் எனத் தெரிய வருகின்றது.

கொரிய அரசாங்கம் 120 தொலைத்தொடர்புச் சாதனங்களை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்றது. இவை ஒவ்வொன்றும் சுமார் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியானவையாகும்

இவற்றை மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர சிங்கள மீனவர்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். தொடர்ந்தும் இதுபோன்ற சாதனங்கள் ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு வழங்கப்படும் எனவும், இந்தத் தகவல் தொடர்புசாதனங்களை ஒருங்கிணைக்கும் 12 மத்திய தொடர்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# தனியார் பஸ் உரிமையாளர்கள் புலிகளுடன் பேச்சு நடத்துவர்

## இணைந்து சேவை நடத்துவது குறித்து ஆராயப்படும்

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தைச் சேர்ந்தோர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யாழ்-கொழும்பு பஸ் சேவையை நடத்துவது குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இது தொடர்பாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ண கூறும்போது -

புலிகளுடன் இணைந்து பஸ் சேவைகளை நடத்தவுள்ளதாகவும், இதற்கான பேச்சுக்களைப் புலிகளுடன் நடத்துவதற்காக அவர்களின் அழைப்பை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு 10 பஸ்களையும், கொழும்புக்கு 10 பஸ்களையும் புலிகளுடன் இணைந்து போக்குவரத்துச் சேவைகளை நடத்துவது குறித்து இந்தப் பேச்சுக்கள் அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பொங்கலைமுன்னிட்டு நெல்லியடியில் பாரம்பரிய விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்படவிருக்கும் தைப்பொங்கல் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பாரம்பரிய விளையாட்டுக்களாகிய- கிளித்தட்டு, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல், சறுக்குமரம் ஏறல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்களில் பங்கு பற்ற விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஆகியோர்-தமது விண்ணப்பங்களை 15 ஆம் திகதிக்கு முன்பாக விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(ரா)

### மருதங்கேணியில் மாவீரர்கள் பெயர் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி இந்து வித்தியாலயத்தில் கல்வி பயின்று விடுதலைப்போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களாகிய மாணவர்களது பெயர் திரைநீக்கம் இன்று பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் - இம்மாவீரர்களது பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று இடம்பெறுகின்றது.

## யாழ். நகர படைத்தளப் பகுதியில்

# அசுத்தமான கால்வாய்கள்; தொற்றுநோய் பரவக் காரணமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள 512 ஆவது பிரிகேட் படைமுகாம் அமைந்திருக்கும் பகுதியில் இருந்து காய்ச்சலுக்குக் காரணமான வைரஸ் கிருமியும், நுளம்புகளும் பெருக்கமடைகின்றனவா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகள் குழுவொன்று கடந்த வாரம் மேற்படி பகுதிக்கு விஜயம் செய்தது. அப்பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல்களை அது அவதானித்தது.

அநேகமான பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல், நுளம்புப் பெருக்கத்துக்குச் சாதகமாகக் காணப்பட்டது. விக்ரோறியா வீதி உட்பட அனைத்து வீதியோரக் கால்வாய்களும் அழுக்கு நிரம்பிக் காணப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் அப்பகுதிகளில் மலத்தியோன் மருந்து விசுறும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. மேலும், யாழ். போதனா மருத்துவமனையின் வளாகப்பகுதியும் அதனை அண்டிய பகுதிகளிலும் மலத்தியோன விசிறப்பட்டிருக்கிறது.

(க,லி)

### போர் பாதித்த ஆஸ்பத்திரிகளுக்கு உதவுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளின் கட்டடங்கள் மற்றும் உட் கட்டடமைப்பைப் புனரமைப்பதற்கும், மருந்து மற்றும் வாகன வசதிகளை வழங்கவுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலகவங்கி இதற்கென 10 கோடி ரூபாவை இந்தப் பணிகளுக்காக, வட - கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கியிருக்கிறது என்று மாகாணசபைச் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(லி)

# மீன்பிடியியல் டிப்ளோமா முடித்தோர் ஆசிரிய நியமனம் பெறும் வாய்ப்பு!

## 25 பேருக்கு கிழக்கில் பணியாற்றச் சந்தர்ப்பம்

(மானிப்பாய்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல்துறை டிப்ளோமாக் கல்வி பயின்று சித்தியடைந்தவர்களில் மூன்றாம் அணி மாணவர்கள் 25 பேருக்கு மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து ஏற்கனவே வெளியேறிய மீன்பிடியியல்துறை டிப்ளோமா இரு அணி மாணவர்களுக்கும்- முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

மேலும், பாடசாலைகளில் இத்துறை சார்ந்த வெற்றிடங்கள் இன்னும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (100)

### வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

கொழும்பில் இருந்து பொருட்கள் கொண்டுவரும் சகல வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் இன்று பி.ப 3.30 மணிக்கு - யாழ். வணிகர்கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

### தற்கொலைக்கு முயற்சித்த பொலிஸார்

(வாழைச்சேனை)

வாழைச்சேனையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது, நவரட்ண (வயது-20) என்ற பொலிஸ் உத்தியோகத்தர் சிறு காயங்களுடன் உயிர்தப்பினார்.

(07)



திருநெல்வேலி லயன்ஸ் கழக அறக்கொடை வழங்கல் வைபவத்தின்போது, பிராந்திய இணைப்பாளர் லயன். எஸ்.எஸ். தங்கராஜா உரையாற்றுகிறார். யாழ். மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தலைவர் கலாநிதி க.குணராசா, வலயத் தலைவர் டாக்டர் (செல்வி) B.கனகரெத்தினம், ஸ்ரீலஸ்ரீ நல்லை ஆதீன சுவாமிகள் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

# டோறாப்படகு மோதி பலியான மீனவர்; முழு விசாரணைக்கு நீதிபதி உத்தரவு!

## காயமடைந்தவர்கள் வாக்குமூலங்களும் பதிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு கடலில் காணாமற்போன மீனவர் மரணமடைந்தது தொடர்பாக, விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

தொண்டமனாறில் கடந்த வாரம் மீன்பிடிப்படகு மீது கடற்படை படகு மோதிய சம்பவத்தில் காணாமற்போன இளைஞரின் சடலம் காங்கேசன்துறை கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டது தெரிந்ததே.

சடலம் தொடர்பான மரண விசாரணைகளும், பிரேத பரிசோதனையும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்களது வாக்குமூலங்களையும், மேற்படி நபரின் சடலத்தைக் கடற்கரையில் முதலில் கண்ட இராணுவச்சிப்பாயினது வாக்குமூலத்தையும் பெற்றுக்கொள்ளும்படி மல்லாகம் மாவட்ட நீதிவான் காங்கேசன்துறைப் பொலிஸாருக்குப் பணிப்புரை செய்திருக்கிறார்.

பிரேத பரிசோதனை அறிக்கையையும் மேற்படி வாக்குமூலங்களையும் வைத்து மேலதிக விசாரணைகள் தொடரப்படவிருக்கின்றன.

(க,ச)

### கொழும்புத்துறை துறைமுகம் ஊடாக

# மட்டுப்படுத்திய அளவில் மீன் பிடிப்பதற்கு அனுமதி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்த கொழும்புத்துறை துறைமுகம் நேற்று முன்தினம் முதல் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.


சில தினங்களுக்கு முன்னர் கொழும்புத்துறை மீனவர்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே -

நேற்றுமுன்தினம் முதல் - 25 வள்ளங்களும், 73 மீனவர்களும் கொழும்புத்துறை துறைமுகமூடாக மீன்பிடிக்கவும்- அவற்றை அங்கேயே சந்தைப்படுத்தவும் அனுமதியளிக்கப்பட்டது.

இவ் 73 மீனவர்கள் தவிர ஏனைய மீனவர்கள் இப்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதோடு வேறு எவரையும் இவ்வீதியூடாக தாம் அனுமதிக்க முடியாது எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(60)

## பாபாவின் அருள்வாக்கு



ஒருமுறை யேசுவும், பீட்டரும் ஒரு படகில் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கரையை நெருங்கியதும் ஒரு மனிதன் அவர்களை அணுகி பசிக்கிறது எனக் கேட்டான். பீட்டர் அவனிடம் சில மீன்களை கொடுத்தார். அப்போது யேசு கேட்டார். தேவைப்படுபவனுக்கு ஏன் மீனைக் கொடுக்கிறாய்? அதற்குப் பதில் வலையைக் கொடுத்திருந்தால் அவனே மீன் பிடித்துக் கொள்வானே. உண்மையில் உன்னால் அவனுக்காக தினமும் மீன்பிடிக்க முடியாது. அவனது அன்றாடத் தேவையை தீர்க்கவும் முடியாது என்றார். ஒரு மனிதனுடைய ஒரு வேளைப்பசியைப் போக்குவதைவிட அவன் வாழக்கை நடத்த அவனுக்கு வேலை தேடிக் கொடுங்கள். தங்கள் உணவுக்குக் கூட வருமானமின்றித் தவிப்பவருக்கு சம்பாதிப்பதற்குண்டான வழியை ஏற்படுத்திக் கொடுங்கள்.

# நுளம்புகள் பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பரவி வரும் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

அண்மைக்காலமாக இனந்தொியாத காய்ச்சலினால் மக்கள் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பொதுச்சுகாதார பரிசோதகர்கள், யாழ். நகர வீதிகளில் நுளம்பு பெருகும் பற்றைகள், குப்பைகள், குளங்கள் போன்ற இடங்களில் கட்டங் கட்டமாக மருந்து தெளித்து வருகின்றனர்.

மருந்து தெளிக்கும் இயந்திரம் குறைவாக இருப்பதனால் பணிகள் மெதுவாகவே நடப்பதாகவும், இப்பணி யாழ்.மாநகரசபைப் பகுதி முழுவதும் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

# 186 சமுர்த்தி உத்தியோகத்தருக்கு யாழ்.குடாநாட்டில் பதவி வெற்றிடம்

சமுர்த்தி ஆளணி தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சினால் புதிதாக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்துக்கமைய, யாழ். மாவட்டத்தில் 186 வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரியவருகின்றது.

புதிய ஆளணி எண்ணிக்கை தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சின் சுற்றுநிருபம் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி- யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I இல் 526 பேரும், தரம் II உத்தியோகத்தர்கள் 247 பேரும் பணியில் இருக்க வேண்டும்.

ஆனால், 620 பேர் மட்டுமே தற்போது சேவையில் உள்ளனர். இதனால் 153 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன.

அத்துடன்- 77 சமுர்த்தி முகாமையாளர்கள் யாழ்.மாவட்டத்தில் பணியாற்ற வேண்டியிருக்கின்ற போதும் 44 பேர் மட்டுமே சேவையில் உள்ளனர். 33 முகாமையாளர்களுக்கு வெற்றிடங்களுள்ளன.

மொத்தமாக 183 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களின் பதவிகள் வெற்றிடமாக உள்ளதாகவும், இவ்வெற்றிடங்களை நிறைவு செய்தாலேயே சமுர்த்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அவதானமாக இருக்க எச்சரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் வேகமாக பரவி வரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பாக, அனைத்து மக்களையும் விழிப்பாக இருக்கும்படி - யாழ்.சுகாதார திணைக்கள அதிகாரிகள் பிரதேச ரீதியாக, வாகனம் மூலம் எச்சரிக்கைப் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர். (60)

# லான்ட்மாஸ்ரரில் மாணவர் உலா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் தரம் 1 இல் புதிதாக இணைந்த மாணவர்களுக்கு ''சுற்றுச்சூழலை அறிந்து கொள்ளல்'' என்ற நிகழ்ச்சித்திட்டம் நேற்று நடைபெற்றது.

ஒவ்வொரு பாடசாலையும் முதலாம் தரத்தில் இணைந்த புதிய மாணவர்களை லான்ட்மாஸ்ரரில் அழைத்துச் சென்று- ஆலயங்கள் அருகிலுள்ள சந்திகள் போன்றவற்றை பார்வையிட வழிப்படுத்தினர்.

லான்ட்மாஸ்ரர்களில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு, சிறுவர் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டன. அத்துடன் வாழைகள், மலர்மாலைகளால் அவை சோடனையும் செய்யப்பட்டிருந்தன.

இன்றையதினம்- தரம் ஒன்று மாணவர்களை, இரண்டாம் தர மாணவர்கள் வரவேற்கும் 'கால்கோள் விழா' ஆரம்பப்பிரிவு உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் வெகு சிறப்பாக நடைபெற ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கசிப்பு உற்பத்தி செய்து

# தண்டப் பணம் செலுத்தாதவருக்கு ஆறு மாதங்கள் கடூழியச் சிறை!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்த நபர் ஒருவருக்கு தண்டப்பணம் செலுத்தத் தவறியதால் ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை 3ம் கட்டையைச் சேர்ந்த ஒருவரை, அண்மையில் நூற்றி ஐம்பது லீற்றர் கோடாவுடன் பொலிசார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது அவரை 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு யாழ். நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டது.

ஆனால், குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேற்படிநபர் தண்டப் பணம் செலுத்தத்தவறியமையால் அவரை நேற்றுமுன்தினம், யாழ். நீதிமன்றில் ஆஜராக்கியபோதே யாழ். நீதிவான் ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனையை விதித்தார்.

# மகேஸ்வரன் பொறுப்பற்று நடக்கிறார்; சிங்கள ஐக்கிய மகாசபை சாடுகின்றது!

### ஜயலத்தை சிங்கள அமைச்சர் எனக் கூறியதற்கும் கண்டனம்

(கொழும்பு)

அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு, அமைச்சர் மகேஸ்வரன் பொறுப்பற்றதனமாகச் செயற்படுவதாக ஐக்கிய சிங்கள மகாசபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய சிங்கள மகாசபையின் தலைவர் கலாநிதி நாத் அமரசேகர தெரிவித்திருப்பதாவது -

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சர்ச்சையில் அமைச்சர் மகேஸ்வரன் புலிகளுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார். ஒரு அரசாங்க அமைச்சர் என்ற வகையில் இது பொறுப்பற்ற, கண்டிக்கத்தக்க செயலாகும். அத்துடன், அரசாங்கத்தை இக்கட்டில் மாட்டுவதுமாகும்.

ஜெயலத் ஜெயவர்த்தனவை சிங்கள அமைச்சர் என்று கூறி, இன முரண்பாடுகளைத் தூண்ட அவர் முயற்சிக்கிறார். அரசாங்க அமைச்சர் என்ற வகையில் சிங்கள மக்களைப் பாதிக்கும் கருத்துக்களை அமைச்சர் மகேஸ்வரன் வெளியிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சிக்கு அடுத்த மாதம் 30 தொலைபேசி இணைப்புகள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 30 தொலைபேசி இணைப்புகள் அடுத்த மாதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான நடவடிக்கையை ரெலிகொம் பிராந்திய அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி தொலைபேசி இணைப்புகளை அடுத்தமாதம் இறுதிப்பகுதியில் வழங்கமுடியும் எனத் தெரியவருகிறது.

முதற்கட்டமாக இப்பிரதேசத்தில் அமைந்துள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்களுக்கு தொலைபேசிகள் வழங்கப்படுமென ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச,கி)

## சான்றிதழ்கள் வழங்கல்

அகில இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தினரால் நடாத்தப்பட்ட விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்ற, யாழ். இமையாணன் அ.த.க. வித்தியாலய மாணவர்களுக்கு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வினாவிடைப் போட்டியில், முதலாம் இடத்தை சி.கலைவாணி, கு.ஜெனிபா, செ.சதினி, சி.அஜந்தீபன் பெற்றுக்கொண்டனர். மற்றும் பேச்சுப்போட்டியில், சி.கலைவாணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டார்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : உ.அரவிந்தன்
முகவரி: 84/2, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.



நான்காவது அகவையில்.



பெயர் : ப.தட்சணா
முகவரி: 92, றக்கா றோட், யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

## அன்றும்

தமிழின்பன்

யாழ்ப்பாணம் கிழக்குக் கடற் பரிசோதகர் பிரிவிலுள்ள கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றி சென்றவாரம் பார்த்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக இன்று அப்பிரதேசத்தில் நிலவும் குறைபாடுகளை எடுத்துநோக்குவோம். அதன் பின்னர், யாழ். குடாநாட்டின் கடற்தொழில் நடவடிக்கைகள் - அன்றும் இன்றும் என்ற தொடரில் சாவகச்சேரி கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகளினைப் பார்ப்போம்.



யாழ். கிழக்கு கடற்பரிசோதகர் பிரிவில் மக்களின் அன்றாட வருமானம் நாளுக்கு நாள் வேறுபடுகிறது. ஒரு சில நாட்களில் 1000 ரூபாவும், ஒரு சில நாட்களில் 5000 ரூபாவும், சில காலங்களில் அந்த வருமானமும் இல்லாது போகலாம். அத்துடன் கூடிய வருமானம் கிடைக்கும் நாட்களில் முற்று முழுதாக அன்றே உழைத்த பணத்தைச் செலவழித்துவிடுவார்கள். இதனால், தொழில் அற்ற காலங்களில் அல்லது வருமானம் குறைந்த காலங்களில் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

○ இப்பிரதேசத்தில் சுகாதாரச் சீர்கேடு பாரிய ஒரு பிரச்சினையாகவே உள்ளது. இதனால், தொற்றுநோய்கள் இலகுவாகப் பரவுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. இதற்கான பிரதான காரணம், கழிவு நீரை அகற்றுவதற்கு ஒழுங்கான வடிகால் வசதியின்மையாகும். இருந்த வாய்க்கால்களும் பல ஆண்டுகளாகத் திருத்தம் செய்யப்படாததால் தூர்ந்துபோய் உள்ளன. எனவே, யாழ்ப்பாண மாநகரசபை உரிய நடவடிக்கை எடுத்து, இப்பிரதேச மக்களையும் சேர்த்து, தூர்ந்து போயுள்ள வாய்க்கால்களைப் புனரமைத்து, கழிவுநீரை நல்ல முறையில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

○ இப்பிரதேச வீதிகள் பல ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமை இம்மக்களின் அடுத்த பெரிய பிரச்சினையாகும். மக்கள் தமது கடல் உணவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தத் தடையாக இருப்பதில் சீரற்ற வீதிகள் முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே, உரிய திணைக்களங்கள் இப்பிரதேச வீதிகளைத் திருத்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

○ பிரதானமாக ஒரு பிரதேசம் அபிவிருத்தியடைய வேண்டுமாயின், அதற்கு அப்பிரதேச மக்களின் கல்வி அறிவும், பொதுச் சேவையில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆர்வமும் முக்கிய காரணிகள் ஆகும். இப்பிரதேசத்தில் இவை இரண்டுக்குமே மிகுந்த பற்றாக்குறை நிலவுவதில் - பொது நிறுவனங்கள் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய ஆர்வமாக இருக்கும்போதும், பொது மக்களின் ஆர்வக்குறைவு பெரும் தடையாக இருக்கிறது என்பதே மிகவும் துரதிர்ஷ்டமானதாகும்.

சாவகச்சேரி கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிப்பார்ப்போம். பொதுவாக சாவகச்சேரிக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் கடற்தொழிலாளர்கள் பகுதிநேரத் தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.

1.நாவற்குழி
2.கைதடி நாவற்குழி(கோவிலாக்கண்டி)
3.மறவன்புலோ
4.தனங்கிளப்பு
5.சாவகச்சேரி (கோவில் குடியிருப்பு)
6.மீசாலை
7.கச்சாய்
8.கெற்பலி

என்பன இப்பிரிவினுள் அடங்கும் பகுதிகளாகும்.

தனங்கிளப்பு, கோவில் குடியிருப்பு, கச்சாய் ஆகிய பகுதிகளிலுள்ள கடற்தொழிலாளர்கள் முழுநேரக் கடற்தொழிலாளர்களாகவே உள்ளனர். மற்றைய பகுதிகளில் கடற்தொழிலாளர்கள் பகுதிநேரத் தொழிலிலேயே ஈடுபடுகின்றனர். பொதுவாக இவர்கள் வீச்சுவலை, களங்கண்டி முறைகளைப் பயன்படுத்துகின்றனர். வீச்சுவலைத் தொழில் என்பது, ஆழம் குறைந்த கடல் பகுதியில் நடந்துசென்று கைக்கு அடக்கமான வலையை மீன்கள் வரும் பகுதிக்குள் வீசுவதன் மூலம் பிடிக்கப்படும். இத்தொழில் பழக்கப்பட்டவர்களினால் மாத்திரமே செய்யப்படுகின்றது.

பொதுவாக இப்பிரிவில் காணப்படும் கடற்தொழிலாளர் கீழ்வரும் அட்டவணையில் உள்ளது.

பொதுவாக சோளகக்காற்று (தென்மேல் பருவக்காற்று) காலத்தில் - கெற்பலி, கச்சாய் போன்ற பகுதிகளில் இறால் பெருமளவு பிடிக்கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் வாடைக்காற்று (வடகீழ்பருவக் காற்று) காலத்தில் இறால் பிடிக்கப்படுகிறது. பொதுவாக பாலை, கயல், கொய், திரளி, ஓரா போன்ற மீனினங்கள் பெருமளவு பிடிக்கப்படுகின்றன. பொதுவாக இப்பிரதேச மீனவர்கள் கிழக்கு அரியாலை, கௌதாரிமுனை, கேரதீவு ஜெட்டி, பூநகரி, கிளாலிக் கடல்நீரேரி போன்றன ஆகும். மாதாந்தம் சராசரியாக 2170 Kg மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

| பிரதேசம் | குடும்பங்களின் எண்ணிக்கை | கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் | குடித்தொகை |
|---|---|---|---|
| நாவற்குழி | 47 | 55 | 216 |
| கைதடி, நாவற்குழி | 169 | 180 | 691 |
| மறவன்புலோ | 17 | 58 | 217 |
| தனங்கிளப்பு | 32 | 40 | 150 |
| சாவகச்சேரி | 72 | 100 | 322 |
| மீசாலை | 30 | 30 | 116 |
| கச்சாய் | 46 | 58 | 256 |
| கெற்பலி | 15 | 16 | 59 |

இப்பிரதேச மக்கள் கடற்தொழிலைவிட பகுதி நேரமாக தும்புத்கைத்தொழில், வயல்களில் கூலிவேலைகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். தும்புக்கைத்தொழிலுக்கு இப்பிரதேசம் சாதகமாக விளங்குவதற்குப் பெருமளவு தென்னை மரங்கள் இங்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தேங்காய் மட்டைகளைச் சேகரித்து கடற்கரையில் பெரிய கிடங்குகள் வெட்டிப் புதைத்துவிடுவர். ஒன்று/இரண்டு

## இன்றும்

வருடங்களின் பின் கிளறி எடுத்தபின் தும்பை அடித்துப்பிரித்து எடுத்து கயிறு திரிப்பர்.

நாவற்குழி பிரதேசமானது பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற ஓர் அமைவிடத்தில் உள்ளது. 1983 ஆம் ஆண்டு காலத்தில் இறால் பதனிடும் அன்றூஸ் தொழிற்சாலை இங்கு இயங்கியது. இதனால் பல நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்பைப் பெற்றனர். அத்துடன், நாவற்குழி A-9 பாதையில் அமைந்துள்ளதுடன் இவ்வழியாகப் புகையிரதப்பாதையும் செல்கின்றது. இதனால் இங்குள்ள உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்குப் போக்குவரத்துப் பிரச்சினையும் இல்லை.

இப்பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு கருத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் -

### 1.மீள்குடியேற்றம்

மறவன்புலோ, தனங்கிளப்பு, சாவகச்சேரியின் ஒரு பகுதி என்பன உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளது. இதனால், இப்பிரதேசமக்கள் தொழில் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். இவர்களது அபிவிருத்திக்கு மீள்குடியேற்றம் மிகவும் அவசியமானதொன்றாக விளங்குகின்றது.

2.வறுமைநிலையே இப்பிரதேசம் ஏனைய பகுதிகளிலிருந்து பின்தங்கிய நிலையில் உள்ளதற்கு மிக முக்கியமான காரணமாகும். இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கும் காரணிகளில் பிரதானமாக விளங்குவன - நிலவளமின்மை, நன்னீர் வளம் இன்மை. பொதுவாக இங்குள்ள நிலம் மணற்பாங்கானது. இதனால் விவசாயம் பெருமளவில் சாத்தியமற்றது. இதனால் இப்பிரதேசங்களில் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி, கைத்தொழில் ரீதியில் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம்.

3. அண்மையில் நடந்த வன்முறைகளின் போது இப்பிரதேசத்தின் 90% மான வீடுகள் முற்றாகச் சேதமடைந்து விட்டன. தற்பொழுது வீடின்மை முக்கிய பிரச்சினையாக இருப்பதனால், மக்கள் தம் சொந்த இடங்களில் வாழ முடியாதுள்ளது.

4. குடிநீர் வசதி மிகவும் குறைவாகவே உள்ளது. இங்கு அநேகமாக உவர்நீர்க் கிணறுகளே காணப்படுகின்றது. எனவே பிரதேசசபையின் உதவியுடன் குடிநீர் விநியோகம் செய்வதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

## தொழில்வங்கி



| நிறுவனம்:- | UNDP | செலான் வர்த்தக வங்கி |
|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | நிகழ்ச்சித் திட்ட அலுவலர் (மட்டக்களப்பு, கிளிநொச்சி)<br>நிதி உதவியாளர் (மட்டக்களப்பு, கிளிநொச்சி) | பயிற்சியாளர் |
| அடிப்படைத் தகுதி - | சமூக விஞ்ஞானம்<br>பொருளியல்<br>திட்டமிடல்<br>பட்டதாரியாக இருத்தல் வேண்டும். | 3 வருட மனிதவள முகாமைத்துவ அனுபவம் |
| விண்ணப்ப முடிவுத் திகதி | 09-01-2003 | 09-01-2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்- "நமது ஈழநாடு" அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி!

செ.கிருஷ்ணராசா
நேர்காணபவர் - சாந்தகுமார்

## பகுதி - 1


**A**-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தென்னிலங்கையிலிருந்து வட இலங்கை நோக்கி பெருமள விலான உல்லாசப் பயணிகளும், புவியியல் நாடுகாண் ஆர்வலர்க



கந்தரோடையில் கண்டெடுக்கப் பட்ட சங்ககாலப் பாண்டியர் நாணயம்.

ளும் யாழ்ப்பாணத்தை ஒரு தடவை யாவது தரிசித்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாகவும், வர்த்த கத்தின் அடிப்படையில் தென்னிலங கையையும், வட இலங்கையையும் இணைக்கும் வர்த்தகப் பிரமுகர்க ளின் நோக்கின் அடிப்படையி லும் - நாளுக்கு நாள் பலர் இங்கு வந்து போவதனை நாம் காண் கிறோம்.

இந்த **A**-9 பாதையினுடைய திறப்பு, யாழ்ப்பாண குடாநாட்டின்



கந்தரோடையில் பெற்ற ரோம தங்க நாணயம், பிற்பக்கம் போர்வீரனின் தோற்றம் உள்ளது.

வரலாற்றில் பாரிய மாற்றங்களை யும், தாக்கங்களையும் ஏற்படுத்தி வரும் நிலையியலுக்கேற்ப, எமது பிராந்தியத்து தொல்லியல் பண் பாட்டு கருவூலங்கள் தொடர்பாகவும், மையங்கள் தொடர்பாகவும், ஏற்க னவே நிலவிக்கொண்டிருந்த ஒரு விதமான நிலையை, அதனுடைய முறைமையை தற்பொழுது மாற்றி யமைத்துவிட்ட வகையினையும் நாம் காண்கின்றோம்.

அந்த வகையிலேயே இனத்துவ ரீதியிலான பகைமையுணர்வு மேலோங்கி இருந்த காலகட்டங்க ளில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்த நிலைமைக்கும், அரசியலடிப்படையி லான இந்தச் சமாதான நிகழ்வுகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படு கின்ற இந்தக் காலகட்டத்திலும், இந்தப் பிராந்தியத்துப் பண்பாட்டு தொல்லியல் வரலாற்று நிகழ்வுக ளில் மாற்றங்களை நடாத்த சிலர் முயல்வதையும் நாம் காணக்கூடிய தாகவுள்ளது.

இங்கு வருகின்ற பெருமளவி லான யாத்திரிகர்கள் அதாவது, குறிப்பாக தென்னிலங்கையிலி ருந்து வருகின்ற சுற்றுலாப் பயணி களின் கந்தரோடை பற்றிய நோக்க விதானத்தினை - தாம் ஏற்கனவே 'பன்சல'களில், பாலர் கல்வி முதல் பெற்றுக்கொண்டிருந்த அந்த அறிக் கைகளின் பின்னணியில் "கதிற கொட" என்றழைக்கப்படுகின்ற கந்த ரோடை என்ற மையத்தைத் தரிசித்து விட வேண்டுமென்ற ஓர் ஆவலி னால், யாழ்ப்பாணத்துக்கு வந்த தென னிலங்கை மக்கள் உடனடியாகவே கந்தரோடைக்குச் சென்று வரத் தொடங்கியதிலிருந்து அறியமுடி கின்றது.

நாளுக்கு நாள் அதிகரித்து வந்த இந்த சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கை காரணமாக - சமகாலத்தில கந்தரோடையில் பாரிய மாற்றங்க ளும், நெருக்கடிகளும் ஏற்பட்டு வரு வதனையும் நாம் காணக்கூடியதாக வுள்ளது.

இந்தக் கந்தரோடை என்ற மையம் தென்னிலங்கை மக்களுக்கு கி.பி 14 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "நம்பத்த" என்ற சிங்கள நூலில கொடுக்கப்பட்ட, கதை ஒன்றின் அடிப படையில உள்வாங்கப்பட்டிருக் கிறது. வட இலங்கையில் கந்த ரோடையைச் சேர்ந்த ஒரு பெண் காக்கைக்கும், தென்னிலங்கையில் கதிர்காமத்தைச் சேர்ந்த ஒரு ஆண் காக்கைககும் இடையிலான திரு மணநிகழ்வின் பொழுது, கதிர்கா மத்தில் இருந்து அந்த திருமண ஊர்வலம் வட இலங்கையில் கந்த ரோடையை நோக்கி வந்து கொண டிருந்தபோது காணப்பட்ட இடங்கள் பற்றியும், அங்குள்ள பௌத்த தலங் களினுடைய வரலாற்று முக்கியத்து வங்கள் பற்றியும் "நம்பத்த" என்ற இலக்கியத்தில் சுவையான செய்தி கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.


அந்த இடத்திலேதான் "கதிற கொட" என்று "பாளி" மொழியில் குறிபபிடப்படுகின்ற இடப்பெயரை, தற்பொழுது உள்ள கந்தரோடை யாகக்கொண்டு - தென்னிலங்கை மக்களுக்கு ஊட்டப்பட்ட கல்விப் போதனையின் அடிப்படையிலேயே "கதிறகொட" என்பதுதான் கந்த ரோடை எனக்கொண்டு, பலர் இன் றுள்ள கந்தரோடை என்ற மையத் துக்கு வந்து செல்வதனைக் காண்கி றோம்.

இந்தப் பின்னணியிலே, பல பௌத்த நிகழ்வுகளுக்குரிய வர லாற்று முக்கியத்துவத்தினையும், தென்னிலங்கை வரலாற்றாசிரி யர்கள் கந்தரோடையுடன் இணைதது, கந்தரோடையில் காணப்படுகின்ற பௌதத எச்சங்களை, சிங்கள பௌத்த எச்சங்களாகக் காட்டி - அந்த மையத்தினைப் பெரும் பான்மை இனத்தினது செல்வாக்கின் அடிப்படையில் ஏற்பட்ட ஓர் சான்றா கக்கொண்டு, அவர்கள் தமது தேசி யத்தின் இருப்பிற்கான அல்லது இந்தத் தீவினுடைய உரிமைக் கோரலுக்கான ஒரு தொலலியல் அலகாக, அதனைத் தமது ஆய்வு களிலேயோ அல்லது அரசியல் ரீதியிலான வாதப்பிரதிவாதங்களி லேயோ, முன்னெடுத்து வைப்பத னைக் காண்கின்றோம். அது வழக்க மாகியும்விட்டது.

இன்றைய நிலையில் எம்மவர் கள்கூட கந்தரோடையை, அது சிங் கள பௌத்த மக்களினுடைய ஒரு மையமென்ற தப்பான எண்ணக்கரு வோடு இருப்பதனையும் நாம் காண் கின்றோம்.

இந்தப் பின்னணியே கந்த ரோடை என்ற தொல்லியல் மையத் தைத் தமிழ் பண்பாட்டுப் பரப்பி லிருந்து அந்நியப்படுத்துவதற்குரிய உந்து சக்தியாகவும் அமைந்திருந் ததென்றால் அது மிகையில்லை.

ஆனால், நடந்தது என்ன? உண் மையிலேயே வரலாற்றுக் காலத் தில் அல்லது வரலாற்றுக்கு முற் பட்ட காலத்தில் கந்தரோடை எந் தப் பெயரால் அழைக்கப்பட்டது? எந்தெந்தப் பண்பாட்டு அலகுகளினால் அதனுடைய மேல் கட்டுமானம் உரு வாக்கிக் கட்டப்பட்டிருந்தது? அந்த நகரத்திலே வாழ்நத மக்கள் எவ் வெவ் மொழிகளைப் பேசினார்கள்? அந்த மொழிகளைப் பேசிய மக் கள் அந்த நகரத்திலே ஆற்றிய தொழில் முறைகள் பற்றிய விபரங் கள் யாது? என்பன பற்றியெல்லாம் வட இலங்கைத் தொல்லியலாளர்



கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட செப்பு ரோம நாணயங்கள்

களோ அல்லது தென்னிலங்கை தொல்லியல் ஆசிரியர்களோ அல்லது வரலாற்று ஆசிரியர்களோ கவலை கொண்டு அல்லது அவற்றைப் பற் றிய சிரத்தையோடு இதுவரை ஆராய வில்லை.

அந்த வகையிலேதான் வட இலங்கையில் பாராமுகமாக இருந்து வருகின்ற இந்தக் கந்தரோடை மீது, தற்போதைய சமாதான நிலைமையை நன்கு பயன்படுத்திக்கொண்டு அர சாங்க இராணுவம் முகாமைத்து வத்தை தமது பலமாகக்கொண்டு, சிங்கள பௌத்த குருமார்கள், அதனைச் சிங்கள பௌத்த தேசி யத்தின் முக்கியமான மையமாக வெளிக்காட்டுவதற்காக, அந்தத் தொல்லியல் மையத்தில் தமது வழிபாட்டுக்குரிய தெய்வமான ஒரு சமாதி புத்தரையும் இருத்தி, புரா தன ரஜமகா விகாரை அங்கு இருந்ததாக ஒரு அறிவித்தல் பல கையையும் தொங்கவிட்டுக் கொண்டு, இப்பொழுது இருந்து கொண்டிருக் கிற நிலைமை - உண்மையிலே கவலைக்கிடமான செய்தியாகவே, இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் அல்லது யதார்த்தமாகச் சிந்திக்கத் தெரிந்த அத்தனை உள்ளங்களுக் கும் தென்படுகின்றது.

உண்மையில் இந்த சமாதான காலத்தை என்ன நோக்கத்துக்காக இருசாராரும் உருவாக்கினார்களோ, அந்த நோக்கவிதானத்தைத் தவறிய அல்லது அந்த நோக்கவிதானத் துக்குக் குந்தகம் ஏற்படுத்து கின்ற ஒரு முறையிலே, இவ்வாறான தொல்லியல் மையங்களில் சிலர், அதாவது சமாதானத்தை விரும் பாதவர்கள், அமைதியின் எதிரிகள் - தமது மேலாதிக்கத்தை காட்ட எத்த னிக்கின்ற தன்மையை தற்போது நாம் காண்கின்றோம். அறிவியல் ரீதியாக தொல்லியலை ஒரு விஞ் ஞானபூர்வமாக ஆராய்கின்ற எவ ருமே இவ்வாறு பௌத்த மதத்தை மேலாதிக்கமாகக் கொண்டு ஒரு தொல்லியல் மையத்தைப் பார்க் கின்ற, கட்டுப்படுத்துகின்ற வகையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவ் வாறான நிலைக்குள் இருந்து எப்பொழுது இலங்கையினுடைய அறிவியல் ரீதியிலான ஆய்வுகள் விடுபடுகின்றதோ, அன்றிலிருந்தே இந்தத் தீவானது - ஒரு பல்தேசிய, பலமதம் செழிக்கின்ற ஒரு புண் ணிய பூமியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் நாம் அண் மைக் காலங்களில் கந்தரோடையில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவரீதியி லான ஆக்கிரமிப்பை, அதாவது தொல்லியல் திணைக்களத்துக் குரிய பிரதேசத்தை, இராணுவபலத் தின் பின்னணியில் பௌத்த குரு மார்கள் - நாக விகாரையைச் சேர்ந்த பௌத்த தேரர்கள் தக்கவைத்துக் கொண்டிருப்பதை - தொல்லியல் என்ற அறிவியலுக்குச் செய்கின்ற மாபெரும் துரோகமாகவே காண முடியும்.

அறிவியல் ரீதியாக நாம் அம் மையத்தினுடைய இருக்கையை, அந்த மையத்தினுள்ளே இருக் கின்ற தொல்லியல் எச்சங்களினு டைய கிடக்கையை அறிய விளைந தோமாயின் - அந்தப் புராதன நகரமானது, பௌத்த சிங்கள மக் களுக்குரியதாகவோ அல்லது இந்து திராவிட மக்களுக்குரியதாகவோ அல்லது வெளிநாட்டிலிருந்து வந்த பல்தேசிய வர்த்தக சமூகங்களுக் குரியதாகவோ கொள்ள முடியாத ஒரு நிலையில் - சர்வதேச ரீதியான வியாபகப்படுத்தப்பட்ட ஒரு நகர மாக, அது கிறிஸ்துவுக்கு முற்பட்ட தசாப்த காலத்தில் இருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரைக்கும் விளங்கி இருந்து வந்த வரலாற் றையே அண்மைக்காலத்தில் எம் மால் அங்கிருந்து சேகரிக்கப்பட்ட தும், அகழ்ந்து பெற்றுக்கொள்ளப் பட்டதுமான தொல்லியல் சான்று கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது.

(அடுத்த வாரம் தொடரும்)



**செ.கிருஷ்ணராசா**

**யாழ்.பல்கலைக்கழக வர லாற்றுத்துறை முதுநிலை விரிவு ரையாளராகக் கடந்த இரு தசாப்தங்களாகக் கடமை யாற்றுகின்றார்.**

**இவர் ஏராளமான தொல் லியல் எச்சச்சான்றுகளையும், ஆவணங்களையும் தனது சேகரிப்பில் கொண்டுள்ளார். யாழ்ப்பாண நங்கையரின் அணிகலங்கள், தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட் டுத் தொன்மையும், இலங்கை வரலாறு பாகம் - 1 ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார். பல ஆய்வுக்கட்டுரைகளை எழு தியுள்ள இவர் தொல்லியல் - பண்பாட்டுப் பொருட்காட்சிகள் பலவற்றையும் ஒழுங்கு செய்து நடாத்தியுள்ளார். இவரது கந்தரோடை மீதான தொல் லியல் கண்டுபிடிப்புக்களின் முடிவுகள் தொடர்பாக - சேர். ஜராவதம் மகாதேவன், ஆ. தேவராசா, பேராசிரியர் S.பத்ம நாதன் ஆகியோரது பாராட்டு தல்களை இவர் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பி டத்தக்கது.**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | ஊர்காவற்றுறை |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 70/- | 50/- | 40/- | 40/- | 50/- | 40/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 60/- | 65/- | 70/- | 80/- | 70/- |
| கத்தரிக்காய் | 80/- | 60/- | 60/- | 60/- | 70/- | 80/- |
| பாகற்காய் | 100/- | 60/- | 90/- | 80/- | 80/- | 120/- |
| வெண்டிக்காய் | 60/- | 40/- | 40/- | 40/- | 30/- | 50/- |
| கரட் | 60/- | 80/- | 40/- | 45/- | 50/- | 60/- |
| பீற்றூட் | ✱ | 60/- | ✱ | 40/- | 25/- | 60/- |
| வெங்காயம் | 50/- | 40/- | 35/- | 50/- | 50/- | 35/- |
| பச்சைமிளகாய் | 90/- | 80/- | 60/- | 60/- | 50/- | 80/- |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

- திருக்குறள்

## நமது நோக்கு

# செயலில் காட்டட்டும்!

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றி அவர்களுக்குச் சுமுக வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் - புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச்செல்லவும் மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகளுக்குத் தடையாக விளங்கிய - இராணுவத்தரப்பின் கடும்போக்கினால்- பாதுகாப்பு விவகாரங்களைக் கையாள்வதற்கு உருவாக்கப்பட்ட உபகுழு செயலிழந்து போயிருக்கிறது.

அமைதிச்சூழலைப் பயன்படுத்தி பல ஆண்டுகளாகவே தமது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து அகதி வாழ்வையே வாழ்ந்து வரும் மக்களின் அவல வாழ்வுக்கு முடிவு காண்பதற்கு - அர்த்தமுள்ள எந்தப் பங்களிப்பினையும் படைத்தரப்பு வழங்க முன்வராத பட்சத்தில், மேற்கொண்டும் பாதுகாப்பு உபகுழுவைத் தக்கவைத்துக் கொண்டு கூட்டங்களையும், விவாதங்களையும் நடாத்துவதில் பயனில்லை என்ற இறுதிக்கட்டத்தில்- விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க பாதுகாப்பு உபகுழுவைக் கலைப்பதற்கு அரசாங்கமும் இணங்கியிருக்கிறது.

இராணுவத்தரப்பின் கடும்போக்கு நிலைப்பாடு, மக்களது சுமுகவாழ்வுக்கு எதிராக இருப்பதையும்- இராணுவம் விதித்த நிபந்தனைகளில் பொருத்தமற்ற தன்மையையும் - விடுதலைப்புலிகளின் அழுத்தமான முறையில் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியதன் விளைவாக - இந்த நியாயப்பாடுகளை உணர்ந்ததன் பேரில், அரசாங்கம் இந்த முடிவுக்குச் சம்மதம் தந்திருக்கிறது.

இந்தத் தீர்மானமானது, மக்களது நலனில் அக்கறை கொள்ளாத படைத்தரப்பின், குறிப்பாக- யாழ் .பிராந்திய இராணுவத்தலைமையின் கடும்போக்கிற்கு கிடைத்துள்ள மிகச்சரியான பதிலென்றே கொள்ளமுடியும்.

தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமென்பதற்காக - விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு - இனியும் இராணுவத்தரப்பு தனது தளர்வற்ற, படைநலனை முன்னிறுத்திய செயற்பாடுகளால் - முட்டுக்கட்டைகள் போடமுயலுமானால் அது அமைதிக்கான இறுதிச்சந்தர்ப்பத்தையே சிதைத்துவிடுமென்பதை அரசு புரிந்துகொண்டதைக் காட்டுவதாக - பாதுகாப்பு உபகுழுவின் கலைப்பு விவகாரம் அமைந்துள்ளது.

ஆனாலும் பிரச்சினை இத்துடன் முற்றுப்பெற்றுவிடுவதாக அமைந்துவிடப்போவதில்லை. தாய்லாந்துப் பேச்சுக்களில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதன்படி - உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள பகுதிகளிலிருந்து இராணுவம் விலக்கப்பட்டு, பொது மக்களிடம் மீளவும் இராணுவம் தங்கியிருந்த வீடுகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த முதற்கட்டத்தைத் தொடர்ந்து உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பதாக அரசாங்கம் விடுதலைப்புலிகளிடம் உறுதியளித்திருக்கிறது.

இந்த நகர்வுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மிகவும் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

எனவே, அரசாங்கம் - இந்த முறையாவது தான் உறுதியளித்தபடி செய்தேயாக வேண்டிய கட்டத்திலிருக்கின்றது.

அமைதி முயற்சிகளின் மீதான தனது தரப்பின் நம்பிக்கைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, தனது உறுதிமொழிகளை எப்பாடுபட்டேனும் நிறைவேற்றினால் மாத்திரமே - இனிவரும் பேச்சுக்கள் பொருளுடையதாக அமையும் என்பதை அரசாங்கம் செயலில் காட்டவேண்டும்.

# மட்டு. ஊடகவியலாளரின் வீடு மீது இனந்தெரியாதோர் கிரனேட் வீச்சு

## பெற்றோல் குண்டால் வீட்டை எரிக்கவும் முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள ஊடகவியலாளர் ஜெயானந்தமூர்த்தியின் வீட்டின் மீது நேற்று அதிகாலை 12.10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கிரனேட் வீசித் தாக்கியதுடன் வீட்டைத் தீயிட்டு எரிக்கவும் முயற்சி செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வாழைச்சேனை இராணுவமுகாம் எல்லைக்குள் - உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் இருந்த ஊடகவியலாளர் எஸ் .ஜெயானந்தமூர்த்தியின் வீடு மீது நேற்று அதிகாலை கிரனேட் வீசித்தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போது வீட்டிலிருந்த ஊடகவியலாளர் மற்றும் குடும்பத்தினர் இதையடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றனர். வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டு வீசித் தீ வைக்கவும் முயன்றனர்.

ஆனால், கடும்மழை பெய்து கொண்டிருந்ததால் அம்முயற்சி வெற்றிபெறவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளர் ஜெயானந்தமூர்த்தி வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

ஊடகவியலாளர் ஜெயானந்தமூர்த்திக்கு முஸ்லிம் தீவிரவாதக்குழுக்கள் சில தொடர்ச்சியான அச்சுறுத்தலை விடுத்து வந்தன.கடந்த வருடம் ஜூன் மாதம் 26ஆம்திகதி இவரது வீடு என எண்ணி பக்கத்து வீட்டிற்கு தீ வைத்து எரித்த சம்பவம் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதல் குறித்து கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் கடும் கண்டனம் தெரிவிததுள்ளது. இது தொடர்பாக சங்கம், பிரதமருக்கு அவசரக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

இத்தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த, சங்கத்தின் செயலாளர் சண்.தவராசா, சுற்றிவர இராணுவப் பாதுகாப்பு இருந்த பிரதேசத்துக்குள், அவர்களுக்குத் தெரியாமல் தாக்குதல் நடத்தியவர்கள் உள் நுழைந்திருக்க முடியாதெனத் தெரிவித்தார்.

## கூட்டணி அமைக்கும் பேச்சு ஜே.வி.பியுடன் நடக்கவில்லை

**பொ.ஐ.மு.செயலாளர் தி.மு.ஜெயரட்ண**

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணியை உருவாக்குவது குறித்த உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் இன்னமும் நடைபெறவில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தி.மு. ஜெயரட்ன தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்ப்பது தொடர்பாகவே பேச்சுக்களை நடத்தின. இதற்காகவே இரண்டு தடவைகள் ஜே.வி.பியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சுக்கள் கூட்டணிக்கான பேச்சுக்களல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்று உத்தியோகத்தர்கள் 9 மணிக்கு வேலைக்கு வரவேண்டும்

**சகல திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபம்**

சகல பிரதேச செயலக, மாவட்ட செயலக; உள்ளூராட்சி அலுவலகங்களில் பணியாற்றும் நிறைவேற்றுத் தரத்திலுள்ள அதிகாரிகள் காலை 9 மணிக்கு முன்னர் வேலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு, சகல திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபத்தை அனுப்பிவைத்துள்ளது.

நிறைவேற்றுத் தரத்திலுள்ள அதிகாரிகள் காலை 9 மணிக்கு முன்னர் வேலைக்குச் சமூகமளிப்பதற்கு தாமதிப்பதால் மக்களின் கடமைகளை நிறைவேற்றுவதிலும் தாமதம் ஏற்படுகிறது.

இதைவிட கனிஷ்ட நிலை அதிகாரிகளும் தாமதமாகவே அலுவலகங்களுக்கு வருகின்றனர். இதனால், அரச செயலகப் பணிகள் பாதிக்கப்படுகின்றன என அமைச்சர் அலிக் அளுவிகார தெரிவித்துள்ளார்.

### முஸ்லிம்களின் பிரச்சினை குறித்து

# சகல முஸ்லிம்களும் ஏற்றுக்கொண்ட பிரதிநிதியுடனேயே நாம் பேசுவோம்!

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு



சகல முஸ்லிம் சமூகத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முஸ்லிம் பிரதிநிதியுடனேயே, தாம் முஸ்லிம்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் பேச்சுக்களின்போதே அரசதரப்புப் பிரதிநிதிகளிடம் அன்ரன் பாலசிங்கம் இதனைத் தெரிவித்தருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சா ரவூப் ஹக்கீமை தற்போதைய நிலையில் சரியான முஸ்லிம் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளமுடியாது. முஸ்லிம்கள் தொடர்பாகப் பேசுவதற்குச் சரியான முஸ்லிம் பிரதிநிதி ஒருவரே வரவேண்டும். எல்லா முஸ்லிம்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவருடனேயே இது தொடர்பாகப் பேசமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- பேச்சுக்களில் கலந்துகொள்ளும் புலிகளின் பிரதிநிதிகளுடன் உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்களை அமைச்சர் ஹக்கீம் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்தது.

இந்தப்பேச்சுக்களின் போது பல்வேறு விடயங்கள் ஆராயப்படுவதாகவும், புலிகளுடன் தாம் தொடர்ந்தும் உள்ளூர் மட்டச் சந்திப்புக்களையும் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் அவ்வூடகத்திற்கு மேலும் தெரிவித்தார்.

## கனரக வாகன சாரதி அனுமதி 3 வருடத்துக்கே செல்லுபடியாகும்

கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் 3 வருடத்திற்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும் என மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் 5 வருடத்திற்கு ஒரு முறையே கனரக வாகன அனுமதிப்பத்திரம் மாற்றப்பட்டு வந்ததாகவும், இந்த ஆண்டில் இருந்து இந்த நடைமுறை மாற்றப்பட்டுப் புதிய நடைமுறை அமுலுக்கு வருவதாகவும் மோட்டார் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்காத சாரதிகள் கடும் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என்றும் அத்திணைக்களத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

## பாதிக்கப்பட்ட பௌத்ததலங்கள் விபரம் சேகரிக்க குழு நியமனம்

**இரு வாரங்களில் அறிக்கைக்கு ஜனாதிபதி பணிப்பு**

வட-கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட பௌத்த தலங்கள் உட்பட வணக்கஸ்தலங்கள் பற்றி ஆராய்வதற்கு ஜனாதிபதி விசேட குழுவொன்றை நியமித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போதே மேற்படி விசேடகுழு நியமிக்கப்பட்டது.

எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, பேரியல்அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன, எல்லாவல, மேதாலங்க தேரர் ஆகியோர் உட்படப் பத்துப்பேர் இக்குழுவில் அடங்கியுள்ளனர்.

மேற்படி குழுவினர் வட-கிழக்குப் பகுதிகளில் காணப்படும் அனைத்து வணக்கஸ்தலங்கள் குறித்தும் விபரங்களைச் சேகரித்து இருவார்ங்களில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதியால் பணிக்கப்பட்டுள்ளனர். (01)

# வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் மந்திகை ஆஸ்பத்திரிக்குப் படையெடுப்பு

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை மட்டும் மந்திகை மருத்துவமனையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 182 நோயாளிகள் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டனர். மேலும், 1650 பேர் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை- காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மோசமான நிலையில் இருக்கும் நோயாளிகள் தொடர்ந்தும் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கடந்த 5ஆம் திகதி மட்டும் இத்தகைய 10 நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவருகின்றது. (13)

# சமஷ்டியும் சிங்களத் தலைமைகளும்
# டி.எஸ்.சேனநாயக்க முதல் ரணில் வரை

சென்றவாரத் தொடர்ச்சி....

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் இடதுசாரிகளான டாக்டர்

ஜி.ஜி.பொன்னம்பலம்



என்.எம்.பெரேரா தலைமையிலான லங்கா சம சமாஜக்கட்சி, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமென் ஆகியோர் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை சிறிமாவின் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்கி இருந்தன.

1970 ஆம் ஆண்டு தேர்தல் முடிந்து தேர்தலில் வாக்களித்தபடி புதிய உறுப்பினர்களைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு முன்பாகவே, இலங்கையில் றோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி என்ற இயக்கம் அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டது. கம்பஹா மாவட்டத்தில் ஜே.வி.பியினர் சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். கதிர்காமம் வரை பல இடங்களிலும் ஆயுதக்கிளர்ச்சி தொடர்ந்தன. யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளும் தாக்குதல் நடந்தது. கொழும்பிலும் சில இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றன. பிரதமர் சிறிமா வெளிநாடுகளிடம் உதவி கோரினார். உடனடியாகவே இந்தியா உதவிக்கு வந்தது. இந்திய விமானப்படை விமானங்கள் வந்திறங்கின. கொழும்புத் துறைமுகத்திற்கும் இந்திய போர்க் கப்பல்கள் வந்தன.

ஜே.வி.பியின் ஆயுதக்கிளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். விசாரணைகள்

**எஸ்.எம்.ஜி.**

நடைபெறத்தொடங்கின.

இதன் பின்னர் தேர்தலில் வாக்களித்தபடி, இலங்கையை ஒரு சோசலிசக் குடியரசாக்கும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காகப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட அரசியல் நிர்ணயசபை கூட்டப்பட்டது.

புதிய சோசலிசக்குடியரசு அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பு, சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டீ.சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் வேறு அமைச்சுக்களுடன் அரசியல் அமைப்பு விவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் உறுப்பினர்களும் அடிப்படைப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும்படி அரசியல் விவகார அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கிடையில் தமிழ்க்கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குக் கடந்த சில வருடங்களாகச் சிலர் எடுத்து வந்த முயற்சி, இச்சமயத்தில் பெருமளவு நிறைவேறியிருந்தது. வல்வெட்டித்துறையில் நடந்த பல பேச்சுவார்த்தைகளின் பின்னர், இந்த முயற்சி வெற்றிபெற்றிருந்தது. வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ஞானமூர்த்தியும் இம்முயற்சியில் பெரும்பங்கு கொணடிருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாகத் தீர்வுகாண்பதற்கு ஆறு அம்சத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, தமிழ்க்கட்சிகள் சார்பாகப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதை யாழ்.நகரமேயர் சி.நாகராஜா பிரதமருக்கு அனுப்பி வைத்திருந்தார். இத்திட்டம் சம்பந்தமாக மேலும் விளக்கம் சொல்வதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காத்திருப்பதாகவும், மேயர் நாகராஜா அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இக்கடிதம் பற்றிப் பிரத



கொல்வின்

மர் சிறிமா சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை. பலமுறை பல சந்தர்ப்பங்களிலும் எடுத்துச் சொன்ன பின்னரே இக்கடிதம் கிடைத்தது என்று மட்டும் பிரதமரிடமிருந்து பதில் வந்தது.

அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதா? அதனால் பயன் கிடைக்குமா?- என்ற வாதப்பிரதிவாதங்கள் நடந்தன.

அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களூடாகப் புதிய அரசியல் யாப்புக்கு அடிப்படைப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பது என்று, புதிய தமிழர் முன்னணி தீர்மானித்தது. இதன்படி சமஷ்டி ஆட்சி அமைபபுக்கு வழிகாட்டக்கூடிய அம்சங்களைக் கொண்ட பல அடிப்படைப் பிரேரணைகளை இந்த முன்னணி தயாரித்து தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் ஒவ்வொருவரின் பெயரிலும் சமர்ப்பித்தது.

அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் இந்த அடிப்படைப் பிரேரணைகள் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் பெயரில் தாக்குதல் செய்யப்பட்டன. இதே சமயம், புதிய சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பு உருவாக்கப்படும்போதே, இனப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டுவிடலாமெனப் பலரும் நம்பிக்கை தெரிவித்தனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரும், யாழ்ப்பாணத்திலும், இலங்யையிலும் சமூகத்தில் பெரும் மதிப்புக்குரியவருமான ஏ.வைத்திலிங்கம் கட்சிச் சார்பற்ற பிரமுகர்கள் சிலரை அழைத்துக்கொண்டு, பிரதமர் சிறிமாவைச் சந்தித்தார். புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று வைத்திலிங்கம் சொன்னார்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் எழுந்து, இரண்டு மணி நேரம் தமது கருத்தை விரிவாக எடுத்துக் கூறினாராம். அதுவரை வைத்திலிங்கம் கூறியவற்றை அமைதியாகக் கேட்டுப் பதில் சாதகமாகச் சொல்லப் போகிறார் என்று தோன்றிய கட்டத்தில், கொல்வின் எழுந்து பேசினாராம். அவர் பேசிமுடிந்ததும் எதுவும் செய்யமுடியாது என்று பிரதமர் சிறிமா சொன்னாராம்.

அரசியல் நிர்ணயசபையில் தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் சமர்ப்பித்த சமஷ்டி ஆட்சி அதிகாரங்களைக் கொண்டதான அடிப்படைப் பிரேரணைகள் ஒவ்வொன்றும் சபையில் விவாதிக்கப்படாமலேயே அரசியல் விவகார அமைச்சரினால் நிராகரிக்கப்பட்டன.

இதன்பின் அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்வதில் பயனில்லையென்று, இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் முடிவுசெய்து நின்றுவிட்டன.

வட்டுக்கோட்டை தியாகராஜா, நல்லூர் அருளம்பலம் ஆகியோரின் ஒப்புதலுடன் புதிய சோசலிசக் குடியரசுயாப்பு நிறைவேறியது.

இலங்கையை ஒரு சோசலிசக் குடியரசாக்கும் புதிய அரசியல் யாப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை நிரூபிப்பதற்காகத் தமது காங்கேசன்துறைத் தொகுதி உறுப்புரிமையை ராஜினாமாச் செய்து, தன்னுடன் ஒருவரைப் போட்டிக்கு நிறுத்தி அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களென்பதை நிரூபிக்கட்டும் என்பது தலைவர் செல்வநாயகம் சிறிமா அரசுக்குச் சவால் விடுத்தார். அதன்படி தமது எம்.பி பதவியை ராஜினாமாச் செய்தார்.

இத்தொகுதி இடைத்தேர்தலை நாட்டின் சூழ்நிலை சரியில்லையென்று கூறி சிறிமா அரசு இரண்டு



என்.எம்.பெரேரா

வருடங்களுக்கு மேலாக இழுத்தடித்தது.

புதிய அரசியல் யாப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லையென்றும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சட்டவிரோதமாக அரசியல் யாப்பின் சில பகுதிகளைப் பிரசுரம் செய்து தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் விநியோகம் செய்தனர். இவர்கள் "தேசத்துரோகிகள்" எனக் கைது செய்யப்பட்டு "ட்ரயல் அட் பார்" நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். திருவாளர்கள் அ.அமிர்தலிங்கம், வி.என். நவரெத்தினம், க.துரைரெத்தினம், பண்டிதர் கா.பொ.இரத்தினம் ஆகிய நால்வர் மீதே தேசத்துரோகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

அரசியலிலிருந்தும் தமது வழக்கறிஞர் தொழிலிலிருந்தும் இலங்கையிலிருந்து ஒதுங்கி, மலேசியாவில் தங்கியிருந்த தலைசிறந்த வழக்கறிஞரும் இலங்கைத் தமிழர் தலைவர்களில் ஒருவருமான ஜி.ஜி பொன்னம்பலம், அரசியல் காழ்ப்புணர்ச்சிகளையெல்லாம் விடுத்து இவ்வழக்கில் தோற்றி வாதாடுவதற்கு வருகிறார் என்ற செய்தி வெளியானதும் தமிழ் மக்கள் அடைந்த பேருவகைக்கு எல்லையே இல்லை.

(அடுத்தவாரம் தொடரும்)



றோகண விஜேவீர

---

நேசன்

## எங்கே போகிறோம்...?

# துன்புறுத்தும் ரசனை!

மனித மனம் விசித்திரமானது. பொதுநோக்கில் மனிதனுக்கு இன்னென்ன விஷயங்கள் ஆனந்தம் தரும், இவையிவை கவலையூட்டும் என்று வரையறை செய்து வைத்திருக்கிறோம். ஆனாலும் சில சமயங்களில் மனிதர்கள் மகிழ்ச்சி தேடும் மார்க்கமே பார்க்கக் கேட்க விசித்திரமாய், வியப்பாய் சில சமயம் வேதனையாயக்கூட அமைந்துவிடுகின்றன. எந்த நேரமும் மகிழ்ச்சியாய் நிறைவாய் இருக்க விரும்புவது இயல்பான ஒருமனிதமன ஆர்வம். அது இயற்கை. பொதுவாக எல்லா உயிர்க்கும் அது தேவையானதுமாகும். மகிழ்ச்சியை நாடுவதுபோல அடுத்தவர்க்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்த விளைவது ~ அடுத்தவர் மகிழ்ச்சியில் தானும் மகிழ்வது ஒரு மேலான மனோபாவம். தன் சூழலை மகிழ்வுடையதாக்கித் தானும் மகிழ்வடைவது சிறந்த மனிதாபிமானத்துடனான நற்செயலாகும். இந்த மனப்பான்மைக்கு எதிரான ஒரு மன இயல்வு அடுத்தவரது துன்பத்தில், அடுத்தவரது பரிதவிப்பில், அடுத்தவர் வதைபடுவதில் தான் மகிழ்ச்சி கொண்டாடுவது சிலரிடம் இருப்பதை நாம் காண முடியும். இந்த இயல்பின் பாற்பட்ட செயற்பாடுகள் இப்போது நம் மத்தியில் மலிந்துவருவதை நாம் கவனிக்கலாம். அத்தகைய ரசனை அல்லது அத்தகைய ஈடுபாடு பலதரப்பட்ட செயற்பாடுகளினூடு ஆங்காங்கே வெளிப்படுவதை நாம் சமீபகாலமாகக் கண்டும், கேட்டும், அறிந்தும் வருகிறோம். இத்தகைய ரசனை பலவடிவங்களில் வெளிப்படுகிறது. சிலர் பகிடிவதைகளில் ஈடுபடுகிறார்கள். வேறு சிலர் பட்டாசுகளை மற்றவர்களின் மீது கொளுத்தி எறிகிறார்கள். இன்னும் சிலர் சிறுமிகளை, சிறுவர்களைக் கூடப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துகிறார்கள். சிலர் வயது அதிகமான பெண்களைக்கூட இத்தகைய வனமுறைக்கு உட்படுத்துகிறார்கள். இந்தச் செயற்பாடுகள் அனைத்தினதும் அடிப்படையாய் அமைவது, மனித மனத்தின் அடியில் உறைந்து கிடக்கின்ற வன்முறை ரசனையாகும். பொதுவாக இத்தகைய ரசனை உடையவர்கள் தான் சித்திரவதைகளைக் கூட விதம் விதமாகச் செய்கிறார்கள்.

அடுத்தவர்கள் கண்கலங்குவதைக் கூடக் காணப்பொறுக்காத மனித மனங்கள் உண்டு.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடினார் அருட் சுடர் வள்ளலார். அது ஒரு மனித மன உன்னத நிலை. மகிழ்ந்தும் நிறைந்தும் விளங்கும் பொருட்டே உயிர்கள் மண்ணிற் பிறந்துள்ளன என்றும், உயர் நோக்கின் அடிப்படையில் அடுத்த உயிர் வாடுவதைக்கூடக் கண்டு பொறுக்காத அருள் உள்ளவர்கள் அவர்கள். மனிதத்தின் உச்சம் நோக்கிய பயணத்தில் ஒரு உயர்ந்த கட்டம் அது. அடுத்தவனுக்கு நான் துன்பம் விளைவித்தால் அவன் துயரப்படுவான். ஆகவே, நான் துன்பம் விளைவித்தலாகாது என்பது மனித அறிவு. அடுத்தவன் துன்பப்படுகிறான் ~ அவனைத் துன்பமுறாமல் தடுப்பேன் என்பது மனித நேயம். அடுத்தவனுக்குத் துன்பம் விளையாமல் நான் துன்பமுற்றேனும், நான் கவலையடைந்தேனும், அவனைத் துன்பத்தினின்றும் காப்பாற்றுவேன் என்று நின்று போராடுவது ஆன்ம பலம் ~ அதுவே மனிதாபிமானத்தின் உச்சநிலை என ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார். இது மனிதனின் ~ ஆதி மனிதனின் உன்னதப் பண்பு. இதை நோக்கி மனித குலத்தை அழைத்துப் போவது கல்வி, அறிவு இவற்றினது அடிப்படை நோக்கம் ~ இன்று எமது சமூகத்தில் என்ன நடக்கிறது?

பரவலாக இன்று என்னென்ன காரியங்கள் நடக்கின்றன, எத்தனை வடிவங்களில் வன்முறை எமது சித்தத்தை ஆட்சிபுரிகிறது?

அண்மைக்காலத்தில் எத்தனை பேர் பாதைகளில் கொளுத்தி எறியப்பட்ட வெடிகளால் பாதிப்புற்று இருக்கிறார்கள்....?

சிறுவர்கள்தான் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று எண்ணிவிடக்கூடாது. வளர்ந்தவர்கள் ~ பெரியவர்கள் கூட இந்தச் செயல்களைப் புரிவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன. (துயரமான ~ வெட்கக்கேடான உண்மைகள்!)

ஒரு அன்பர் இவ்வாறு ஒரு இளைஞர் கூட்டம் சைக்கிளில் போய்க் கொண்டிருந்த மாணவிகளை நோக்கி வாணம் ஒன்றை ஏவியபோது, அவர்களை அந்தச் செயலின் விளைவுகளை எண்ணிப் பார்க்கும்படி அன்போடு கூறியிருக்கிறார் ~ அவருக்கு அவர்கள் சொன்னபதில் "நாங்கள் அப்படித்தான் செய்வோம் ~ நீர் உம்மட அலுவலைப் பாரும்...." என்பதுதான். இந்த நிகழ்வு எதனைக் காட்டுகிறது? அடுத்தவர்களின் பதைப்பு ~ துடிப்பு இவர்களுக்கு ரசனைக்குரியதாய் இருக்கிறது. அடுத்தவரைத் துன்பமடைய வைக்கும்போது, இவர்களுக்கு ஒருவகை நிறைவு ஏற்படுகிறது. இது Sadism எனப்படுகின்ற ஒருவிதமான நோய்தான். இவர்களது வக்கிரரசனை, இவர்களை இப்படி நடக்கத் தூண்டுகிறது. இவ்வாறு ஒரு செயலைச் செய்துவிட்டால் ஏதோ ஒரு பெரிய சாதனையைச் செய்துவிட்டது போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகிறது.

உளவியலாளர் பார்வையில் இது ஒருவகைக் குரூர ரசனை எனப்படுகிறது. சம்பந்தப்பட்டவர்களின் அடிமனத்தில் மனிதத் தன்மைக்குப் புறம்பான ஒரு தேடல், ஒரு தேவை, ஒரு தாகம் குடிகொண்டிப்பதை இத்தகைய செயல்கள் காட்டுகின்றன.

இந்தப் பட்டாசுக் கலாசாரம் மட்டுமல்ல, பகிடிவதையினூடாக ஒருவனைத் துன்புறுத்துவதும் அவனால் இயலாத ஒரு செயலைச் செய்யுமாறு தூண்டிச் செய்யவைத்து அவன் துன்புறுவதை ரசிப்பதும் கூட இந்த ரசனையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. (எமது பல்கலைக்கழகத்தில் இப்போது இத்தகைய பகிடிவதைக்கு எதிரான ஒரு உணர்வு ஏற்பட்டிருப்பதும், எதிர்காலத்தில் இத்தகைய வதைமுறைகள் இருக்காது என அவர்கள் அறிக்கை விட்டிருப்பதும் மகிழ்ச்சி தருகின்ற விடயங்கள்)

இது ஒருபுறமிருக்க, தெருச்சண்டியன்கள் என்று முரசறைவித்துக்கொண்டு எடுத்ததற்கெல்லாம் கத்தி, வாள் கொண்டு வெட்டுக் கொத்துக்குப் புறப்படும் வீரர் பரம்பரையும் game group என்ற பெயரோடு தனா பெயராலும், படையப்பா பெயராலும் இயங்கி வருவதும் பரவலாக இடம்பெறுகிறது.

இளவயதினரை இப்படியான கைங்கரியங்களில் இறக்கத் தூண்டும் காரணிகளில் பிரதானமான ஒன்று, இத்தகைய திரைப்படங்களாக ~ தென்னிந்திய திரைக்கருப்பைகளாக அமைந்திருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. பறந்து பறந்து சண்டைபோடும் தமிழ்த் திரைப்படக் கதாநாயகனாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு, எங்களது இளசுகள் பாழாய்ப்போவது இன்னும் எங்கள் மூத்தவர்களுக்கு ஏன் உறைக்கவில்லை?

மீண்டும் சந்திப்போம் .........

# இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் மட்டுமல்ல டெங்கும் குடாநாட்டை அச்சுறுத்துகின்றது!

**கேள்வி:- தற்போது யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் வேகமாகப் பரவக் காரணம் என்னவாக இருக்கும்?**

பதில்:- தற்போதைய காய்ச்சலில மூன்று வகையான காய்ச்சல்கள் இருப்பதாக அண்மையில் சுகாதாரத்திணைக்களத்தாலும், கொழும்பிலிருந்து வந்த நிபுணர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று வைரஸ் காய்ச்சல், மற்றையது நெருப்புக்காய்ச்சல், அடுத்தது டெங்குக் காய்ச்சல் என்பனவாகும்.

**கேள்வ:- இந்தக் காலப்பகுதியில காய்ச்சல் பரவியமைக்கு காரணமாக அமைந்த விடயம் என்ன?**

பதில் :- இப்போது மழை பெய்து ஓய்ந்திருப்பதும் பனிக் காலம் என்பதுமே இக் காய்ச்சலுக்கு காரணம் என்று கொழும்பிலிருந்து வந்த நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் எண்ணிக்கை குறிப்பிட்ட சில பகுதிகளில் அதிகமாக உள்ளது. நகரையண்டிய பகுதிகள் இவற்றில் முக்கியமானவை. யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் நாம் ஆய்வு செய்யும் போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதை அறிய முடிந்தது.

இதற்கு முன்பும் டெங்கு காய்ச்சல் இங்கு இருந்தது. இப்போது ஏ-9 பாதை திறந்ததால் இந் நோய் அதிகரித்து இருக்கின்றது. ஏனெனில், தென்பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகம். இதனால், தென்பகுதியில் டெங்கு இருப்பவர்கள் இங்கு வரும்போது இவர்கள் மூலம் காவி நுளம்பினால் இந்நோய் பரவுகின்றது.

முன்னரைவிட டெங்கு நோயாளரின் எண்ணிக்கை இப்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்து இருக்கின்றது. இதற்கும் வைரஸ் காய்ச்சலுக்கும் தொடர்பு இருக்காது . ஏனெனில், வைரஸ் காய்ச்சலுக்கு சாதகமான காலச் சூழ்நிலை இப்போது குறைய ஆரம்பித்துவிட்டது.

**கேள்வி:- டெங்கு காய்ச்சல் மட்டுமல்ல வைரஸ் காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் இப்போது அதிகரிக்கின்றது. இதைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம்?**

பதில்:- பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மட்டத்தில் நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைக்காக, உடனடி நடவடிக்கைக்குழுவொன்று அமைக்கப் பட்டிருக்கின்றது.

இக் குழுவினால் உடனடியாக யாழ்.நகரப்பகுதி, கச்சேரிப்பகுதி, திருநெல்வேலி ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தி பூச்சியியல் ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

யாழ்.வைத்தியசாலை மற்றும் அதனையண்டியிருக்கும் சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் ஆகிய இராணுவ முகாம்கள் ஆய்வு செய்யப்பட்டு, நுளம்புப் பெருக்கம் இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த இடங்களில் 'பொக்கிங் ஸ்பிறே' மூலமாக டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தக் கூடிய மலத்தியோன் கிருமிநாசினியை மண்ணெண்ணையுடன் சேர்த்து காற்றில் விசிறியடிப்பதன் மூலம் நோய் பரவுகின்ற நுளம்புகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றோம்.

இந்த நடவடிக்கையை தொடர்ச்சியாக ஒரு கிழமைக்கு யாழ்ப் பாணத்தில் செய்து கொண்டிருக்கிறோம். அதேமாதிரி நெருப்புக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையாக, உணவு நிலையங்களிலும் தீவிரமான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

இதேமாதிரி, வைரஸ் காய்ச்சலுக்குரிய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து வந்த வைத்திய நிபுணர்கள், அதற்குரிய மாதிரிகளைப் பெற்றுக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

எனினும், அதற்குரிய அறிக்கைகள் இன்னும் வரவில்லை. அந்த அறிக்கை வந்த பின்னர் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன.

**கேள்வி:பொதுமக்கள் இந்த விடயத்தில் எதைச் செய்யலாம்?**

பதில்:-பொதுமக்களைப் பொறு



**சி.சிவமோகன்**
**பூச்சியியல் உதவியாளர்**
**யாழ். பிராந்தியம்**

த்த வரையில் மலேரியா நுளம்பை அவர்களாகவே ஓரளவு கட்டுப்படுத்தலாம். அதாவது, நுளம்புகள் நிரந்தரமாக ஓய்வு எடுக்கக் கூடிய இடங்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் வீடுகளுக்கும் நுளம்பு மருந்து விசிறலாம்.

டெங்கு நுளம்பைப் பொறுத்த வரையில் அதன் வாழ்க்கைக் காலம் குறைவு. மிக விரைவாக இந்த நுளம்பினம் பரவும். அதேநேரத்தில் டெங்கு நுளம்பிலும் வைரஸ் கிருமி பெருகும் காலம் குறுகியது. இதே போல் முட்டையிலிருந்து, நிறையுடல் வருவதற்கு எட்டுநாள் எடுக்கும். இப்படியான நிலையில் மிக விரைவில் கிருமியும் பெருகும். நுளம்பும் பெருகும்.

இதனால் பாதிக்கப்படும் மக்களில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருந்தால் காய்ச்சல் மிக வேகமாக பரவும். அதேநேரம் நிறையுடல் நுளம்புகள் மாலை நேரங்களில்தான் கடிப்பதால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வெளியில் நடமாடுபவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

அநேகமாக நகரப் புறங்களில் எவ்வளவு படித்த மக்களாக இருந்தாலும் இந்த விடயத்தில் மக்கள் கவனம் செலுத்தத் தவறுகின்றனர். இங்குள்ள மக்களுக்கு டெங்கு நோயின் தாக்கம் பெரிதாகத் தெரியவில்லை.

கொழும்பு, மாத்தறை, பதுளை, கண்டி ஆகிய இடங்களில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படுவதைப் போல் இங்கும் உயிரிழப்புக்கள் ஏற்படுத்தக்கூடிய நிலமை உருவாகலாம். எனவே, மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். வைரஸ் காய்ச்சல் இநதக் கால மாற்றத்தில் மாறலாம், ஆனால- டெங்கு நோய் தொடர்ந்து இருக்கும். இதனால், டெங்கு நோயின் தாக்கமும் அச்சுறுத்தலும் தொடரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே உண்டு.

**சந்திப்பு:-**
**கணேஷ், லிவிங்ஸ்டன்**

# மீளக்குடியேற அனுமதிக்குமாறு அல்லாரை வடக்கு மக்கள் மகஜர்

## தீர்வு இன்றேல் சாவகச்சேரி செயலகம் முன்பாக மறியல்

(சாவகச்சேரி)

அல்லாரை வடக்கிலுள்ள இராணுவ முகாமை அகற்றி, அப்பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறும், இல்லையேல்- சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தப் போவதாகவும்,

அல்லாரை வடக்கு வாழ் மக்கள், சாவகச்சேரி பிரதேச செயலரிடம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலரிடம் இம்மகஜரைக் கையளித்தனர்.

அம்மகஜரில் மேலும்,

1996 ஏப்ரலில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் பின்பு தென்மராட்சி வாழ் மக்கள் பலர் மீளவும் தங்கள் வீடுகளில் குடியமர்ந்தார்கள். ஆனால் அல்லாரை வடக்கு வாழ் மக்களோ அப்பகுதியில் இராணுவ முகாம் மற்றும் எறிகணை வீச்சுத்தளம் ஆகியன அமைந்திருந்த காரணங்களால் அப்பகுதியில் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை.

சொந்த வீடுகளிலேயே மீளக் குடியமரவிடாது எமது அடிப்படை உரிமைகளே மீறப்படுகிறது. இதன் காரணமாக பலர் ஜீவனோபாயத்தை சொல்லொணாத்துன்பத்தின் மத்தியிலேயே நடாத்தி வருகிறார்கள்.

எமது மக்களில் பலர் வறுமைக் கோட்டின் கீழே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குறித்த இடப் பெயர்வுக்கு முன்னர், தங்கள் வீடுகளிலுள்ள பயன்தரும் பனை, தென்னை மற்றும் மரங்களிலிருந்து பெறப்படும் வருமானங்களிலேயே வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். ஆனால், தற்போது எவ்வித வருவாயுமற்ற நிலையில் பெரிதும் துன்பமடைகின்றார்கள்.

ஆகவே, மேற்குறித்த விடயங்களை நன்கு பரிசீலனை செய்து உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு, குறித்த இராணுவ முகாமை அப்பகுதியிலிருந்து விரைவில் விலக்க ஆவன செய்யுமாறு இத்தால் பணிவுடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம். அல்லாத பட்சத்தில், சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக மிக விரைவில் மறியற் போராட்டம் நடாத்த நிர்ப்பந்திக்கப்படுவோமெனவும் தெரிவிக்கின்றோம்.

தங்களின் நடவடிக்கை சாதகமாகவும், பாதிக்கப்பட்ட எமது பகுதி வாழ் மக்களுக்கு நன்மையுள்ளதாக அமையுமெனவும் நம்புகின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள்- அரச அதிபர், போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு- 53 ஆவது பிரிவு கட்டளை அதிகாரி, இந்து கலாசார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், பலாலி இராணுவ கட்டளை அதிகாரி, யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர், தென்மராட்சி அரசியற்துறை பொறுப்பாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப் பப்பட்டுள்ளன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பளைக்கோட்ட அதிபர், ஆசிரியர் கூட்டம்

(பளை)

பளைக்கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கற்றற் செயற்பாடு தொடர்பான கூட்டம், எதிர்வரும் 13 ம்திகதி பி.ப. 1 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பளைக்கோட்ட அதபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலை அதிபர்கள் நாளை மறுதினம் 10 ம் திகதி மாணவர்களின் தொகையை வகுப்பு ரீதியாகவும்,

ஆண்-பெண் ரீதியாகவும் கொண்டுவருமாறு பளைக் கோட்ட வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார்.

(115)

## உடற்கல்வி மாணவர்கள் கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வெளியேறிய உடற்கல்வித்துறை டிப்ளோமா 2ம், 3ம் அணி மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11 ஆழ் திகதி காலை 9 மணிக்கு உடற் கல்வித்துறையில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## மாணவர் அறிமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்களுக்கான அறிமுகப்படுத்தல் நிகழ்வு, இன்று காலை 9 மணிக்கு கலைப்பீடாதிபதி தலைமையில், கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# ஏப்பிரலிலேயே வெஸ்பேர்க் இடமாற்றம் யாருடைய நிர்ப்பந்தமும் காரணமல்ல

## என்கிறார் நோர்வே அமைச்சர் ஹெல்கிசன்



வெஸ்பேர்க்

(நகொன்பத்தம்)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கின பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்பட்டிருப்பதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்திருக்கிறார்.

வெஸ்பேர்க் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து கருத்து தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே - 2001 ஆம் ஆண்டிலேயே இந்த இடமாற்றம் குறித்துத் தீர்மானிக்கப் பட்டு விட்டது. தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் ஜோன் வெஸ்பேர்க் முக்கிய இடத்தை வகித்து வருகிறார்.

இதனால், இலங்கைத் தூதுவராக ஆறு வருடங்கள் பதவி வகித்த வெஸ்பேர்க்கின் பதவிக் காலத்தை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நோர்வே அரசாங்கம் நீடித்திருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா வோ.



விதார் ஹெல்கிசன்

அல்லது வேறு நிர்ப்பந்தங்களினாலோ வெஸ்பேர்க்கிற்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை எனவும் விதார் ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு, தூத்துக்குடி கப்பல் சேவை அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்துக்கும் தூத்துக்குடித் துறைமுகத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளதாகத் துறைமுக அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான இறுதிக் கட்ட அறிக்கை, இந்திய -இலங்கை அரசாங்கங்களுக்குத் துறைமுக அபிவிருத்தி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## தவறவிடப்பட்ட அடையாள அட்டை

கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அனுஷாந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு "நமது ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த கொழும்பிலிருந்து அதிகாரி வருகை

## யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேரடியாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றார்.

இதற்காக இவர் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து பணியாற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். நேற்று, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான திருமதி.யூலா டீ சில்வா குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்.

பலாலி இராணுவ வைத்திய சாலை, யாழ்.போதனா மருத்துவனை, கோப்பாய் வைத்திய சாலை போன்றவற்றை நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அத்துடன்- பொதுமக்களுடனும் கலந்துரையாடினார். தொடர்ந்து, பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிமனைக்குச் சென்று அங்கு நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றிலும் பங்குபற்றினார்.

வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சுகாதார அதிகாரிகளுக்கும் இவர் விளக்கமளித்தார். (க)

PHONE CARDS
சகல விதமான I.D.D, LOCAL PHONE CARDS
விற்பனைக்குண்டு
ஸ்ரீ முருகன்
303, K,K,S வீதி, யாழ்ப்பாணம். தொலை.பேசி இல-021 2222670
சிவன் கோவில் வீதி, காரைநகர். தொ.பே.இல 070-212472
(454)



யாழ். நகரப் பகுதியில் வீடுவீடாக விபரம் சேகரிக்கும் படையினரில் இருவரைப் படத்தில் காணலாம். ஒவ்வொரு வீட்டிலும் தங்கியிருப்போரின் விபரங்களை இவர்கள் திரட்டி வருகின்றனர். இதனால் மக்களிடையே பதற்றம் ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததே.

## முஸ்லிம் பிரதிநிதிகள் ஆராய்வு

தாய்லாந்தில் நடைபெறும் அரசாங்க - புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்களில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளும் முஸ்லிம் பிரதிநிதிகள், அமைச்சர் ஹக்கீமுடன் தினமும் கலந்தாலோசனை செய்து வருகின்றனர்.

தினமும் பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னரும், முடிவுற்ற பின்னரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் பார்வையாளர்களாக கலந்து கொள்ளும் இரு முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துரையாடி வருகின்றனர்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு பேச்சுக்களில் முன்வைப்பது மற்றும் பேச்சுக்களின் போக்கு என்பன குறித்தே இவர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

### உயர் பாதுகாப்பு வலய விவகாரம்

## பிரிட்டிஷ் படை அதிகாரியின் ஆலோசனையும் ஆய்வில்!

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து பிரிட்டிஷ் மற்றும் இந்திய இராணுவ நிபுணர்களுடன் கலந்து ஆராய்ந்து முடிவு செய்யப்படவிருப்பதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் படை அதிகாரியான சோ். மைக்கல் றோஸ் உடன் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன்- மகளிர் விவகாரம் குறித்து பேசுவதற்கு தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழுவை மேற்பார்வை செய்வதற்கு நோர்வே தூதரகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தூரிகை நுண்கலை வளாகம்
மனையியல் நெறிகளுக்கான புதிய பயிற்சிப்பிரிவு - 2003
உடையமைத்தல், பூவேலை
HAIR STYLE and BRIDAL Make - up
கேக் ஐசிங், கைவினைப்பணி
துணி வண்ணமிடல்
சமையல் முறைகள்
புகைப்படக்கலை
ஓவியம் வரைதற்கலை
ஸ்கீறீன் முறை அச்சுக்கலை
- ஆரம்பம் 10 - ஜனவரி - 2003 வெள்ளி 10 மணிக்கு
- விரும்பிய பயிற்சிகளை தேர்வு செய்யலாம்.
- பயிற்சிக்காலம் 3 மாதம்.
- பயிற்சிக்கட்டணம் - ரூ 400/= மட்டும்.
அனுமதிகள் எமது 2 நிறுவனங்களூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
செங்குந்தா வீதி, கல்வியங்காடு
ம.ம.வி.வீதி நெல்லியடி.
(093)

## முக்கிய செய்திகள்

### நிர்வாக சேவை பொறுப்பாளரும் தாய்லாந்தில்

(நகொன்பத்தம்)

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணனும் நேற்று நகொன்பத்தம் நகருக்குச் சென்றுள்ளார். அரசு - புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று நடந்த பேச்சுக்களைத் தொடர்ந்து, நேற்று இரவு புலிகள் தரப்பு பிரதிநிதிகள் குழு தனியாக நடாத்திய கலந்துரையாடலில் பூவண்ணன் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தெல்லிப்பளையில் தொடரும் மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்துக்கு முன்பாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மறியற் போராட்டததில், நேற்றும் அதிக எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றினர்

இப் போராட்டத்தை மேலும், விஸ்தரிப்பது தொடர்பாக இன்று விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வலி.வடக்கின் அனைத்து வெகுஜன அமைப்புக்களும் பங்குபற்றவிருக்கின்றன.

### சிறைக்கைதி தப்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குக் கூட்டிச் சென்ற சிறைச் கைதி ஒருவர் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரை யாழ். சிறையிலிருந்து பஸ் மூலம் வவுனியாவுக்கு கொண்டு செனறபோது, மாங்குளத்தில் இவர் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெ.ஜெயசீலன் என்ற இளைஞனே தப்பியோடியவராவர்.

### பல்கலைக்கழகத்தில் கவிக்கோவின் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள தமிழ்ப் பேரறிஞர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பி.ப.1 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

கம்பனி
A/L 2003
திரு.பாலவாசன்
B.B.A (F.M Spl)
SAT, SUN 1-2 PM
ஆரம்பம் 11-01-03
SAT 1.00 pm
(095)
விக்னா கல்வி நிறுவனம்

## சூடான விவாதங்கள் வழமையே

## பாலாவின் சாடல் பற்றி ஹக்கீம்

பேச்சுவார்த்தைகளின்போது வாய்த்தர்க்கங்கள், சர்ச்சைகள் ஏற்படுவது வழமை. அவ்வாறானதொரு வாதப்பிரதிவாதமே நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஏற்பட்டது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களின்போது, அமைச்சர் ஹக்கீமுக்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் சூடான விவாதங்கள் ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து கருத்துக்களைத் தெரிவித்தபோதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

பேச்சுக்களில் இத்தகைய வாதப்பிரதிவாதங்களும், சூடான விவாதங்களும் ஏற்படுவது வழமை. அப்படிப்பட்ட ஒரு நிலையே பேச்சுக்களில் இருந்தது. ஆனால், நாம் ஒரு சுமுகமான நிலையில் பேச்சுக்களை நடாத்தினோம் என்றார்.

### பயிற்சிப் பட்டறை

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்திலுள்ள பண்பாட்டியல் முதுகலைமாணி மாணவர்களிற்கான இரண்டாவது பயிற்சிப்பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

### வெஸ்பேர்க்...

விகிதத்திலான உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேல் மாகாணசபை பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுப் பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகள் விலகி...

நான்காவது நாளான இன்று பேச்சுவார்த்தைகள் பூர்த்தியானதன் பின்னர் இது பற்றிய விபரங்கள் வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மோதல் தவிர்ப்புச் சம்பந்தமான குழுவில் இருந்து விடுதலைப் புலிகள் வாபஸ் பெற்றிருப்பதால், சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படப் போவதில்லை என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்ததுடன்,

பாதுகாப்புத் தொடர்பான உப குழு கலைக்கப்படவில்லையெனவும், இக்குழுவின் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் எனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### பேச்சுக்களில்...

நடக்கும் அனைத்து விதமான சமாதான நடவடிக்கையையும், ஆதரிக்கவும் வலுப்படுத்தவும் விரும்புகிறோம் என்றும் -

மேலும், சமாதான நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக அங்கு நடந்துவரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு நிதியைத் திரட்டுவதற்காக, சாவதேச அளவிலான மாநாடு ஒன்றை ஜப்பானில் எதிர்வரும் யூன் மாதத்தில் நடைபெறும் என்றும்,

அதில் இந்தியா கலந்து கொள்ளவேண்டும் என்றும், ஜப்பான் வெளிநாட்டமைச்சர்- இந்திய வெளிநாட்டமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவிடம் கேட்டுக்கொண்டார்.

### வட-கிழக்கிலி..

தியாகத்தினால் எமது படையணி உருவாகியது. எனவே, அரசியல் ரீதியாக எமது முழுமையான பிரச்சினை தீர்ந்த பின்னரே கரும்புலிகளைக் கலைத்தல் போன்ற விடயங்களை நாம் நல்லெண்ணத்துடன் அணுகலாம் என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு உப குழுவால் பயனேதும் இல்லை என்பதாலும், பேச்சுவார்த்தை அரங்கில் இராணுவத்தினரின் தலைமையை ஏற்க முடியாது என்பதாலும்- பாதுகாப்பு உபகுழுவை கலைத்து விட தீர்மானித்தோம்-

என்றும் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் தொடர்ந்து பேசும்போது, புலிகளிடமிருந்து ஆயுதம் களையப்படவேண்டும் என்று சரத் பொன்சேகா முன்வைத்த நிபந்தனைகள் புலிகள் தரப்பை ஆத்திரமூட்டும் செயலாகவே இருந்தது.

எம்மைப் பார்த்து, நீங்கள் சரணடையுங்கள் என்று கேட்பதுபோல பாரதூரமான விடயமாகவே நாம் இதனைப் பார்க்கிறோம். இதன் உண்மையான வெளிப்பாடாக பாதுகாப்பு உபகுழு கலைக்கப்பட்டது. இதைப் பூசி மெழுகத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அததுடன், வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஜனாதிபதியும் பிரதமரும் ஆட்சியில் பங்கு வகிபபதால், இரு தரப்பினருக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பிரதமரின் சமாதான முயற்சிக்கு எதிராக ஜனாதிபதி அறிக்கையினை வெளியிட்டிருக்கிறார் என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதநேயப் பிரச்சனைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பது பற்றி தாம் கவலையடைந்திருப்பதாகவும் அவா கூறினார்.

தங்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றத்துக்கான மக்கள் தரும் அழுத்தம் அதிகரித்து வருகிறது என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அப்போது மேலும் தெரிவித்தார்.

Jaffna Technical Institute
No.07, Palaly Road, Jaffna. (இலுப்பையடிச் சந்தியருகில்)
இலவச கணனிப் பயிற்சிநெறி 2003
CHILDRENS PROGRAM
2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி
O/L அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரிவு 3 ஆரம்பம
காலம்: 3 மாதம்
11.01.2003 - 3.30 மணிக்கு
(c-455)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.